இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN


Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 15 | திகதி : 25.09.2022 | விலை : 50.00

## ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் உருவச்சிலை திறந்து வைப்பு





யாழ் மறைமாவட்டத்தின் முதலாவது சுதேச ஆயராகப் பணியாற்றிய ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் உருவச்சிலை திறப்பு விழா நிகழ்வு கடந்த 12ஆம் திகதி யாழ் புனித மரியன்னை பேராலய வளாகத்தில் நடைபெற்றது.

யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் கலந்து சிறப்பித்து ஆயர் அவர்களின் உருவச்சிலையினைத் திரை நீக்கம் செய்து வைத்தார். யாழ் மறைமாவட்டத்தின் மூத்தகுரு அருட்திரு எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகள் ஆயர் அவர்களின் விபரங்கள் பொறிக்கப்பட்ட நினைவுக் கல்லைத் திறந்து வைத்தார்.

ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் மறைவின் 50வது ஆண்டு நிறைவில் முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வில் குருக்கள் துறவிகள் இறைமக்களெனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை அவர்கள் தமது பணிக்காலத்தில் யாழ். மறைமாவட்டத்தில் அளப்பரிய பணிகள் ஆற்றியவர் என்பதுடன் இலங்கையின் முதலாவது தமிழ்க் கத்தோலிக்க ஆயர் இவரே என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.இந் நிகழ்வில் மறைந்த ஆயர் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் ஆளுமைத் திறமைகளையும் அவர் ஆற்றிய பணிகள் பற்றியும் யாழ். மறைமாவட்ட மூத்த குரு அருட்பணி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் எடுத்துரைத்தார்.

## பங்குமட்டங்களில் தேசிய மறைக்கல்வி தினம்



தேசிய மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு யாழ். மறைமாவட்டத்தின் பங்குகளில் சிறப்பான பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. பங்குத்தந்தையர்களின் ஒழுங்குபடுததலில் மறையாசிரியர்களின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட இந் நிகழ்வுகளில் மறைக்கல்வி மாணவர்களுக்கான சிறப்புத் திருப்பலிகள், விளையாட்டுப் போட்டிகள், கலைநிகழ்வுகள், மறையாசிரியர் கௌரவிப்பு நிகழ்வுகள் மற்றும் மகிழ்வூட்டும் நிகழ்வுகள் என்பனவும் இடம்பெற்றன. ☞ 02

## பாசையூரில் அன்பிய ஆண்டு நிறைவு



பாசையூர்ப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட அன்பிய ஆண்டின் நிறைவு நாள் நிகழ்வு கடந்த 18ஆம் திகதி பங்குத்தந்தை அருட்திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது. புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற சிறப்புத்திருப்பலியை யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு மில்பர்வாஸ் அடிகள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். தொடர்ந்து ஆலய முன்றலில் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இக்கலை நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் கலந்து சிறப்பித்ததுடன் சிறப்பு நிகழ்வாக புனித தேவசகாயம்பிள்ளை நாட்டுக்கூத்தும் மேடையேற்றப்பட்டுப் பலரது பாராட்டினையும் பெற்றுக்கொண்டது.

## போதைப்பொருள் பாவனையெனும் புயலிலிருந்து எம் இளையோரைக் காத்தருளும் சிந்தாத்திரை அன்னையே!

### சாட்டி சிந்தாத்திரை அன்னை திருத்தலத் திருவிழாவில் – குருமுதல்வர்



தீவக மறைக்கோட்டத்திலுள்ள சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 24 ஆம் திகதி நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்து ஆற்றிய மறையுரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மறையுரையில் மேலும் தெரிவிக்கையில் சிந்தாத்திரை அன்னை கடல் பயணம் செய்வோரின் பாதுகாவலியாவார், அவ்வன்னை சவால்கள் நிறைந்த எம்வாழ்க்கைப் பயணத்தில் எம்மோடு உடனிருப்பதுடன் பயணத்தின் கவசமாகிய செபமாலையெனும் கவசத்தை எம் கைகளில் தந்திருக்கின்றார் எனவும் சுட்டிக்காட்டினார். மேலும் தற்காலத்தில் போதைப்பொருளெனும் புயலுக்குள் சிக்குண்டு இளையோர் தொலைந்து போகின்றனர். இதனால் பல பெற்றோர்கள் ஏக்கத்தோடு வாழுகின்றார்கள். எனவே இவ் அன்னையின் துணையோடு இப்புயலுக்குள் சிக்குண்டுள்ள இளையோரைக்காக்க அனைவரும் முன்வரவேண்டுமென, குருமுதல்வர் அவர்கள் தனது மறையுரையில் வேண்டிநின்றார். இத் திருநாள் மற்றும் நவநாள் திருவழிபாடுகள் அனைத்தையும் சாட்டித் திருத்தலப் பரிபாலகர் அருட்திரு ஜெகன் கூஞ்ஞே அடிகள் ஒழுங்குசெய்திருந்தார்.

## ஆன்மீகத் தேடல் நூல் வெளியீடு



ஜேர்மன் நாட்டில் வாழும் திரு. திருச்செல்வம் அவர்கள் எழுதிய 'ஆன்மீகத் தேடல்' எனும் நூலின் வெளியீட்டு விழா கடந்த 19 ஆம் திகதி கலைத் தூது அழகியல் கல்லூரியில் இடம் பெற்றது. திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு.ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் நூலை வெளியிட்டு வைத்து நூலின் மதிப்பீட்டுரையை வழங்கினார்.

முதல் பிரதியை அருட்திரு ஜெயசேகரம் அடிகள் குருமுதல்வரிடமிருந்து பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வில் குருக்கள் நலன்விரும்பிகளெனப் பலரும் கலந்துகொண்டனர். ஆன்மீகத் தேடல் நூல் திருமறைக் கலாமன்ற வெளியீடாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எமது எண்ணம்

## ஜெனீவாத் தீர்மானங்கள் கைகூடுமா?

இலங்கையைச் சர்வதேசக் குற்றவியல் நீதி மன்றத்திடம் (International Criminal Court - ICC) பாரப்படுத்த வேண்டுமெனத் தமிழ்த்தேசியக் கட்சிகள் கோரியிருந்தன.

ஆனால் ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்றும், இன அழிப்புத் தொடர்பாக சர்வதேசச் சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென வடக்குக் கிழக்குத் தமிழ்த் தரப்புகளும் சில புலம்பெயர் அமைப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன.

இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்துக்கும், அமெரிக்க - இந்திய அரசுகளுக்கும் விசுவாசமாகச் செயற்பட்டு வரும் தமிழ்த்தேசியக் கட்சிகள் கோரியுள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற விசாரணையைக்கூட ஜெனீவா மனித உரிமைச் சபை பரிந்துரைக்கத் தவறியுள்ளது.

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற அமர்வில் ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளர் வெளியிட்ட ஆரம்ப அறிக்கையில் இலங்கையைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டுமென உறுப்பு நாடுகளிடம் கேட்டிருந்தார்.

ஆகவே இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறுகின்ற அமர்வில் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்குரிய பரிந்துரைகள் விடுக்கப்பட்டுள்ளதாக வெளிவரும் தகவல்கள் மூலம், இலங்கை தொடர்பான வல்லரசு நாடுகளின் புவிசார் அரசியல் போட்டித் தன்மைகள் வெளிப்படுகின்றன.

உள்ளக விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தும் இந்த வரைபு குறித்துத் தற்போது உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பரிசீலித்து வருவதாகக் கூறப்பட்டபோதும், ரசிய - உக்ரெய்ன் போரினால் உள்ளகப் பிரச்சினைகள் பலவற்றை எதிர்நோக்கி வரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இலங்கை விவகாரம் குறித்த அமெரிக்க - இந்தியத் தயாரிப்பை அப்படியே ஏற்றுக்கொள்ளும் என்றே எதிர்பார்க்கலாம்.

செவ்வாய்க்கிழமை மாலை பகிரங்கப்படுத்தப்பட்ட இத் தீர்மானம் குறித்த இந்த வரைபில் போர்க்குற்ற விசாரணைகளில் பயன்படுத்தக்கூடிய தகவல்களை சேகரிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பதற்கும் ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளர் அலுவலகம் உத்வேகப்படுத்த வேண்டுமென்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

மனித உரிமைச் சபையின் இத் தீர்மானத்தை இலங்கை செயற்படுத்த எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு வரை கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

ஜெனீவா மனித உரிமைச் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தில் இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புச் சட்டதிட்டங்களின் படி சர்வதேச தரத்திலான விசாரணைக்கு ஏற்றவாறு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகளை வலுப்படுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டு வரும் தீர்மானத்தின் பிரதிகள், தற்போது இலங்கை விவகாரம் தொடர்பான கருக்குழு நாடுகளிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. விசாரணையின்போது சர்வதேசத் தொழில்நுட்ப உதவிகளுக்குரிய ஒத்துழைப்புகளைப் பெற வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது. ஆறு பக்கங்களில் குறித்த தீர்மானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

பகிரங்கப்படுத்தப்பட்ட இத் தீர்மானம் குறித்த இந்த வரைபில் போர்க்குற்ற விசாரணைகளில் பயன்படுத்தக்கூடிய தகவல்களை சேகரிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கும் மற்றும் பாதுகாப்பதற்கும் ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளர் அலுவலகம் உத்வேகப்படுத்த வேண்டுமென்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# அணு ஆயுதங்களுக்கு எதிராக திருத்தந்தை கண்டனம்

போரின் நோக்கங்களுக்காக அணு சக்தியைப் பயன்படுத்துவது எக்காலத்தையும்விட இக்காலத்தில் மனித மாண்புக்கு எதிரானது மட்டுமல்ல, நம் பொதுவான இல்லமாகிய பூமிக்கோளத்தின் வருங்காலத்திற்கும் எதிரான குற்றம் என்பதை மீண்டும் அறிவிக்க விரும்புகிறேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

செப்டம்பர் 26 ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்ட அணு ஆயுதங்கள் ஒழிப்பு உலக நாளை முன்னிட்டு, அமைதி, அணு ஆயுதக் களைவு, படைப்பின் காலம், ஆகிய மூன்று விடயங்கள் குறித்து வெளியிட்டுள்ள தன் டுவிட்டர் செய்தியில் அணு ஆயுதங்களுக்கு எதிரான தன் கண்டனத்தை மீண்டும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்.

போர்க்காலத்திற்காக அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவது, இப்பூமிக்கோளத்தின் வருங்கால வளர்ச்சியை இயலக்கூடியதாக்குகின்ற அனைத்திற்கும் எதிரானது என்றும் திருத்தந்தை அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் பொது அவை, 2013ஆம் ஆண்டு டிசம்பரில் அணு ஆயுதங்கள் ஒழிப்பு உலகநாளை உருவாக்கி, அந்நாள் செப்டம்பர் 26ம் திகதி கடைப்பிடிக்கப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டது.

Stockholm உலகளாவிய அமைதி ஆய்வு நிறுவனத்தின் அறிவிப்பின்படி, 2021ஆம் ஆண்டில், உலகில் 13,080 அணு ஆயுதங்கள் சேமிப்பில் இருந்தன, இவற்றில் 90 வீதத்திற்கும் மேலான ஆயுதங்களை, அமெரிக்க ஐக்கிய நாடும் இரஷ்யாவும் வைத்துள்ளன. இவற்றில் ஏறத்தாழ முப்பது சதவிகிதம் இராணுவத்தால் பயன்படுத்தப்படுகின்றன.

மேலும், 2016ஆம் ஆண்டு செப்டம்பர் 26ம் திகதி தென் அமெரிக்க நாடான கொலம்பியாவின் Cartagena de Indiasy; அரசுக்கும், FARC புரட்சிக் குழுவுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டதோடு, அந்நாட்டில் இடம்பெற்ற ஐம்பது வருட உள்நாட்டுப் போர் நிறைவுக்கு வந்தது. அந்நினைவு நாள் கொலம்பியாவில் கடந்த வாரம் கடைப்பிடிக்கப்பட்டது.

## குருக்களுக்கான ஞானொடுக்கம்

யாழ் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்த ஞானொடுக்கம் எதிர்வரும் நவம்பர் மாதம் இரு குழுக்களாக நடைபெறவுள்ளது.

முதற் குழுவினருக்கான ஞானொடுக்கம் 07.11.2022 தொடக்கம் 11.11.2022 வரையும், இரண்டாம் குழுவினருக்கான ஞானொடுக்கம் 21.11.2022 தொடக்கம் 25.11.2022 வரையும் நடைபெறவுள்ளது.

இக்காலங்களில் எம் குருக்களை இறைமக்களாகிய நீங்கள் உங்கள் செபங்களில் தாங்கிச் செல்லுங்கள்

## புதுக்குடியிருப்பில் முதல்நன்மை

புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தைச் சேர்ந்த பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு 17ஆம் திகதி கடந்த சனிக்கிழமை அங்கு நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்பணி அன்ரனிப் பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந் நிகழ்வில் இரணைப்பாலைப் பங்குத்தந்தை அருட்பணி மரியதாஸ் அவர்கள் தலைமை தாங்கி திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இத்திருப்பலியில் 48 பிள்ளைகள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

## நாவாந்துறைப் பங்கில் பிபிலோஸ் தியானம்

நாவந்துறைப் பங்கின் புனித நீக்கிலார் மற்றும் புனித பரலோக அன்னை ஆலயத்திலே பங்குத்தந்தை அருட்பணி யேசுரட்ணம் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் பிபிலோஸ் தியானம் மற்றும் மரியாயின் தியானங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தியானங்கள் அருட்பணி இரபாயேல் VC (இயக்குனர், பாப்புலர் மிஷன் தியானம், டிவைன் மேர்ஸி தியான மையம், கள்ளிக்கட்டைக் காடு, மன்னார்) மற்றும் அவரது குழுவினரால் நடாத்தப்பட்டன.

அந்த வகையில் முதலில் புனித நீக்கிலார் ஆலயத்திலே கடந்த 26.08.2022 தொடக்கம் 01.09.2022 வரை ஆறு நாட்களைக் கொண்ட பிபிலோஸ் தியானம் என அழைக்கப்படுகின்ற வேதாகமத்தினை மையமாகக் கொண்ட தியானம் நடைபெற்றது. இத்தியானத்திற்கான முன்னேற்பாடாக பங்கு மக்கள் தாம் அன்றாடம் வாசித்த வேதாகம வார்த்தைகளைக் கொண்டு விவிலியக்காடு ஒன்றினை உருவாக்கியிருந்தனர். அத்தோடு இலங்கையிலே இவ் பிபிலோஸ் தியானம் நடைபெற்ற முதல் பங்கும் நாவாந்துறை என்பது குறிப்பிடத்தக்கது.

## பங்குமட்டங்களில்....

1ம் பக்கத் தொடர்ச்சி

குழமங்கால் பங்கில் பங்குத்தந்தை அருட்பணி பாஸ்கரன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் ஒருவாரகாலம் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் மாணவர்கள், சக மாணவர்களின் வீடுகளைத் தரிசித்தல், திருப்பலிக்கு வருகை தராத மாணவர்களைத் திருப்பலிக்கு அழைத்து வருதல், அவர்களுடன் சேர்ந்து செபித்தல், சூழலைப் பாதுகாக்கும் விழிப்புணர்வை மாணவர் மத்தியில் ஏற்படுத்தும் மரம்நடுகை, விசேடதேவையுள்ள குடும்பங்களுக்கு உதவுதல், உணவைப் பகிர்ந்து கொடுத்தல், சிரமதானம், நோயாளர் தரிசிப்புமற்றும் மறைக்கல்வி வினாவிடைப்போட்டி போன்றன இடம்பெற்றன. இளவாலைபுனிதயூதாததேயு ஆலயப்பங்குத்தை அருட்பணி எரிக் றொசான் அவர்களின் ஒழுங்கமைப்பில் பங்கு மறைக்கல்வி மாணவர்கள், இளவாலை கன்னியர்மட மாணவிகள், புனித வளனார் விடுதி மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கி கலைநிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும் உருத்திரபுரம் பங்கில் பங்குத்தந்தை போல் அனக்கிளிற் அடிகளின் தலைமையில், அருட்சகோதரிகள், மறையாசிரியர்களின் ஒழுங்கமைப்பில் மறைக்கல்வி மாணவர்களுக்கான சிரமதானம், போட்டிகள், கலை நிகழ்வுகள் மற்றும் சிறப்புத் திருப்பலிகளும் இடம்பெற்றன. அத்துடன் கரம்பன் பங்கில் பங்குத்தந்தை தயாகரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இல்ல விளையாட்டுப் போட்டியும் ஓய்வுபெற்ற மற்றும் பணியாற்றும் மறையாசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.



# உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா பயிற்சிநெறிக்கான (2022-2023) விண்ணப்பங்கள் கோரல்

**அகவொளி: உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம், சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்**

**தகைமை:** அதிகுறைந்த தகைமையாக க.பொ.த. (உயர்தரம்) சித்தி அல்லது மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினது சான்றிதழ் (NVQ – 4) சித்தி.

**சான்றிதழ் வழங்கும் பல்கலைக்கழகம்:** அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகம், கொல்வே.
கற்கைநெறியின் தனித்துவங்கள்: (1). உளவியல் துறையில் தகைமை (M.Sc., M.Phil., B.A.) வாய்ந்த வளவாளர் குழாமினால் நெறிப்படுத்தப்படுகின்றது. (2) செயல்முறைப் பயிற்சிகளையும் உள ஆற்றுப்படுத்தல் சார்ந்த ஆய்வினையும் கொண்டுள்ளது. (3) பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்தவர்கள். அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் உள ஆற்றுப்படுத்துநர்களாகப் (Counsellors) பணியாற்றி வருகின்றனர்.

**சான்றிதழ் வழங்கும் நிறுவனம்:** அயர்லாந்து தேசிய பல்கலைக்கழகம், கல்வே. அத்தோடு NVQ சான்றிதழும் வழங்குவதற்கான இறுதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
**கற்கைநெறி மொழி:** தமிழ் **காலம்:** ஒரு வருடம்
**நாட்கள்:** சனி, ஞாயிறு **நேரம்:** 09.00 - 02.15
**நீடிக்கப்பட்ட விண்ணப்ப முடிவு திகதி:** 15-10-2022 **தொடங்கும் காலம்:** நவம்பர் 2022.

**விண்ணப்பப் படிவம் (ரூபா 100):** நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு, அகவொளி: உள ஆற்றுப்படுத்தல் நிறுவனம், சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். ஏனையோர் கற்கைநெறி ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.

**மேலதிக விபரங்களுக்கு:**
கற்கைநெறி ஒருங்கிணைப்பாளர் - 76 937 8476,
இயக்குநர் - 77 476 6891.
பணியகம் - 021 222 2856

அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்
(M.Sc.Guidance & Counselling, Manila)
இயக்குநர்.

# நினைவழியா நாட்கள்!

அருட்திரு. நீக்கிலாப்பிள்ளை பாக்கிய றஞ்சித் அடிகளார் இறைபதமடைந்து 15 ஆண்டுகள் நிறைவடையும் இவ்வேளையில் அவருடைய அழகான வாழ்வையும் அருமையான பணிகளையும் இரைமீட்டிப் பார்ப்பது பயனுடையது.

நானும் றஞ்சித்தும் ஒன்பது வருடங்கள் ஒன்றாகப் படித்தவர்கள். எம்மோடு அருட்திரு. இ. அகஸ்ரின் புஸ்பராஜா, அருட்திரு. அருட்பிரகாசம் (இறையியலில் எம்மோடு இணைந்து கொண்டார்), திருவுளப்பாணியாளர் சபையைச் சேர்ந்த அருட்திரு. ஜேம்ஸ் டண்சன், இன்னும் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்தஅருட்திரு. யூட் நிக்சன், அருட்திரு. ஏ. அகஸ்ரின், அருட்திரு, ஜோ சணிஸ்ரன், அருட்திரு. றெனோல்ட் ஜோர்ச், அருட்திரு. யூட் அமலதாஸ் ஆகியோர் ஒன்றாகப் படித்துவந்தோம்.

றஞ்சித் அடிகளார் தாய் மண்ணாம் யாழ் நகரில் பிறந்து வளர்ந்து, தம் தந்தை மண்ணாம் மன்னார் மறை மாவட்டத்தில் பணிசெய்வதற்காகத் தன்னை அர்ப்பணித்து மன்னாரில் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டவர்.

1967 ஆம் ஆண்டுயூன் மாதம் 11 ஆம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை யாழ். புனித பொஸ்கோ வித்தியாலயத்திலும் இடைநிலை மற்றும் உயர் நிலைக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். பின்னர் யாழ். புனித மாட்டீனார் சிறிய குருமடத்தில் ஒருவருடப் பயிற்சியின் பின்னரட 1988 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ளபுனிதசவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் தன்னை இணைத்துக் கொண்டு மெய்யியல் மற்றும் இறையியல் கல்வியை நிறைவு செய்தார். 1997ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி அன்றைய மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு பத்து வருடங்களின் பின்னர் 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி மனிதநேயப் பணியாற்றும் வேளையில் மன்னார் வெள்ளாங்குளம் கல்விளான் பகுதியில் கிளைமோர்த் தாக்குதலில் களப்பலியானார்.

பாக்கிய றஞ்சித் அடிகளார் மன்னார் மறை மாவட்டக் குருத்துவக் குழாமில் செயற்திறன்மிக்க ஒருவராக விளங்கினார். அநேகமாக எல்லாக் குருக்களாலும் அன்பு செய்யப்பட்டவராகத் திகழ்ந்தார். பேசாலை, மன்னார் பேராலயம், வவுனியா ஆகிய பங்குகளில் உதவிப் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து தேவன்பிட்டிப் பங்குத்தந்தையாக நியமிக்கப்பட்டார். தனது பங்குப் பணிக்காலத்தில் மக்களை நன்கு அறிந்து விளங்கிக்கொண்டு அவர் பணியாற்றினார். இதனால் பலமக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் உரியவரானார். பணித்தளத்தில் துயருறும் மக்களோடு ஒன்றித்திருந்த அடிகளாரின் அடுத்தபணியாக அனைத்துலக கத்தோலிக்க அமைப்பான இயேசுசபைஅகதிகள் பணியகத்தின் (ஜே. ஆர்.ஏஸ்.) மன்னார் மறைமாவட்ட இணைப்பாளராக 2006ஆம் ஆண்டுயூன் மாதம் 6 ஆம் நாள் மன்னார் ஆயரினால் நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் வீட்டுத்திட்டப் பணிகள், வாழ்வியற் பயிற்சிகள், தொழில் துறை, அநாதைப் பிள்ளைகள் பராமரிப்பு, அகதிகள் பணிபோன்றமக்கள் துயர்துடைக்கும் பலபணிகளை ஆற்றிமக்கள் இதயங்களில் நீங்கா இடம்பெற்றார்.

பாதைகள் துண்டிக்கப்பட்டு, போக்குவரத்து வசதிகள் இல்லாது அடிப்படை உணவும், மருத்துவ வசதியும் இல்லாத வன்னிப் பிராந்திய இடம்பெயர்ந்த மக்களுக்கும், அநாதைப் பிள்ளைகளுக்கும் தேவையான மருந்தையும் உணவுப் பொருட்களையும் கொண்டு பல மைல் சுற்றுப்பாதையூடாகப் பயணித்தபோதே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

தந்தை பாக்கிய றஞ்சித் தரிசனப் பார்வையோடு தன் பணிகளை முன்னெடுத்தார். கடுமையான யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தக் காலத்தில் இடம்பெயர்ந்திருந்தபல்லாயிரக்கணக்கானமக்களின் துயர்துடைக்கஅரும்பாடுபட்டார்.

றஞ்சித் தம் ஒப்பற்ற தலைவராகிய கிறிஸ்துவை நெருங்கியதோர் முறையிலே பின்பற்றி அதற்கு ஏற்பதன் வாழ்வையும் பணியையும் அமைத்துக்கொண்டவர்.

றஞ்சித்திடம் சில அசாத்தியமான திறமைகள் இருந்தன. அவரிடம் அபாரமான நினைவாற்றல் இருந்தது. குருமடத்தில் நாம் ஒன்றாகப் படிக்கும் காலத்தில் நடந்து முடிந்த ஏதாவது நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல்களை அல்லது யாராவது நபர்களைப் பற்றிய தகவல்களை எடுக்கவேண்டுமானால் றஞ்சித்திடம் தான் கேட்போம். பெயர்களை, உறவுமுறைத் தொடர்புகளை, ஆண்டு, மாதம் திகதிகளை அச்சொட்டாகச் சொல்லக் கூடியவர். எதைப்பற்றிக் கேட்டாலும், யாரைப் பற்றிக் கேட்டாலும் உடனே விபரங்களைச் சொல்லக்கூடியவராக றஞ்சித் இருந்தார்.

தீமைகளைஎதிர்க்கும் இறைவாக்கினருக்குரிய துணிவு அவரிடம் இருந்தது. தனக்கு எது சரியெனப்படுகின்றதோ அதைத் துணிந்து சொல்கின்றவராக, வெளிப்படையாகப் பேசுகின்றவராக றஞ்சித் இருந்தார். இதனால் இவர் குருத்துவப் பயிற்சிக் காலத்தில் சில உருவாக்குநர்களின் அதிருப்திக்கு ஆளாகியதில் ஆச்சரியமில்லை. றஞ்சித் ஏழைகளை நேசித்தார். துன்புறும் மக்களில் இரக்கம் கொள்ளும் ஈரநெஞ்சம் கொண்டவராக விளங்கினார்.

தென் அமெரிக்காவில் உள்ள எல்சல்வடோர் நாட்டில் பேராயர் றொமேரோ ஆண்டகை அவர்கள் 1980ஆம் ஆண்டு தனது மறைமாவட்டப் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் அந்நாட்டு இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டார். தான் சுடப்படுவதற்கு சிலநாட்களுக்கு முன்னர் அவர் கூறிய வார்த்தைகள் இவை. "கடவுள் என் உயிர்ப்பலியை ஏற்றுக்கொண்டால் என் இரத்தமானது விடுதலையைக் கொண்டுவரும் வித்தாக அமையும் என்பது எனது நம்பிக்கை. கிறிஸ்துவின் மீதுள்ள அன்பால் பிறர் பணிக்காகத் தம்மை அர்ப்பணிப்பவர் மடிவதைப்போல் தோன்றும் கோதுமையைப்போல் வாழ்வார் மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். தன்னை அழித்துக் கொள்வதால் மட்டுமே அது பயனைத்தர முடியும்.

றஞ்சித்! பத்துவருடங்கள் பணி வாழ்வில் பயணித்துள்ளாய். பதினைந்து வருடங்கள் விண்ணுலகில் வாழ்ந்துள்ளாய். 25 வருடக் குருவாக எம்மோடு யூபிலிவிழாக் காணவேண்டிய நீ மக்கள் பணியில் களப்பலியாகி எமக்கு முன்னே சென்று விட்டாய். எம் அனைவருடைய யூபிலித் திருப்பலியிலும் உன்னை நினைவுகூர்ந்து செபித்தோம். தொடர்ந்தும் செபிப்போம்.

இறுதி நாளில், அனைவரும் உயிர்த்தெழும் அந்த நல்ல நாளில், ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து உன்னைப் பார்த்துச் சொல்லும் வார்த்தைகள் இதுவாகத் தான் இருக்கும். "நன்று நம்பிக்கைக்குரிய நல்லபணியாளரே... உனது தலைவனாகிய எனது மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்கு கொள்ளும்! (மத். 25:23)


*அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்*

# மக்கள் நலப் பணியாளன் றஞ்சித்

போரின் நெருப்பில் ஆகுதியாகி மரணப்பாடுகளைச் சுமந்துகொண்ட மறைப் பணியாளர்களிலே எம் அன்புத்தோழன் அருட்பணி பாக்கிய றஞ்சித் அடிகளாரும் ஒருவர். மனிதநேயப் பணியை மக்கள் நேச பணியாகச் செயதவர். கடமை, கண்ணியம், பொறுப்பு தவறாதவர். மக்களுக்காக எதையும் செய்ய வேண்டுமென்ற துணிச்சலே இவரின் சாவுக்கான காரணம். இந்தப்பாதை பாதுகாப்பானது அல்ல இதிலே பயணித்தால் எதுவும் நடக்கலாம் என்று தெரிந்திருந்தும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணி புரிதலே முதன்மையானது என்ற தெரிவை மேற்கொண்டபடியாலே சாவு அவரை அணைத்துக்கொண்டது. நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளனே என்று இறைவன் தன் இன்ப சந்நிதானத்துக்குள்ளே இவரை ஏற்றுக் கொண்டுள்ளார். இவரின் வாழ்வையும் பணியையும் நமதாக்குவோம்.

*அருட்பணி செ. யூட் அமலதாஸ்*

# இறை சந்நிதானத்தில் 15 ஆண்டுகள்
# இறைவனின் குருத்துவத்தில் 25 ஆண்டுகள்



*குருத்துவ வகுப்புத் தோழமையில்*
*சகோதரக் குருக்கள்*

## சுறுசுறுப்பு, பரபரப்பு, கடின உழைப்பின் அடையாளம் பாக்கியறஞ்சித்

அன்பு நண்பன் அமரர் நீக்கிலாப்பிள்ளை பாக்கிய றஞ்சித்தின் இறப்பின் 15வது வருட நினைவில் அவரின் நினைவுகளை ஒரு சில வரிகளில் வடிப்பதில் வேதனை கசிகின்றது.

அமரர் அருட்பணி றஞ்சித் அடிகளின் குடும்பம், சிறுபராயம் பாடசாலைப் பருவம், குருமட வாழ்வு, இணைந்த குருத்துவப் பயணமும் பணியும் எனப் பல கோண அனுபவ இரை மீட்டல் பல உணர்வுகளின் தொகுப்பாய் அமைகின்றது.

சுறுசுறுப்பு, பரபரப்பு, இலட்சியம், கடின உழைப்பு ஆர்வமுடன் செயற்படல், பொறுப்புணர்வு, உரிமை பாராட்டலும், உறவுத் தொடர்பாடலும், நல்லாயனின் தன்மையும் நிர்வாக ஞானப் பண்புகளில் தன்னை இணைத்துக்கொண்டார். இருப்பினும் மரணம் அவரின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ஆனால் இவரின் மரணம், மனிதம், மனித மாண்பு, மனித உரிமை இன நல்லிணக்கமும் வன்முறையற்ற நேர்மையான பிரச்சினை முரண்பாடுகளுக்கான தீர்வு வழிகள், நீதிக்காகக் குரல் கொடுத்தல், ஒடுக்கப்பட்டவர்களுக்காகத் தோள்கொடுத்தல், தேவையில் இருப்பவர்களுக்கு உதவிக்கரம் நீட்டல், நாட்டை ஆள்பவர்களுக்கு வரலாற்றுத் தவறுகளைச் சுட்டிக்காட்டல் எனப் பலவற்றை அது கோடிட்டுக் காட்டுகின்றது. இவரை வருடம் தோறும் நினைவு கூர்வது மட்டுமல்ல மாறாக இவர் விட்டுச் சென்ற சில விழுமியப் பண்புகள், பணிச் செயற்பாடுகள் போன்றவற்றில் சிலதையேனும் செயற்படுத்த முணைவது அடிகளாருக்குக் கௌரவமாகவும் அமையும். அமரர் அருட்தந்தை பாக்கியரஞ்சித்மட்டுமன்றிஇலங்கைஅரசுமேற்கொண்டபோரில்இறந்துபோனஏனையஅருட்தந்தையர்கள்பொதுமக்கள் மற்றும் காணாமலாக்கப்பட்ட அருட்தந்தையர்கள், பொது மக்களுக்கான பொறுப்புக் கூறும் 'புனித நாள்" அரசால் முன்னெடுக்கப்பட்டு அனைத்து மக்களுக்கும் கௌரவமான உரிமையுடன் வாழும் நாள் நாட்டில் மலரும் போதுதான் நல்லாட்சி நிலை கொள்கின்றது என்பதன் அடையாளமாக அமையும்.

*அருட்பணி இ.அகஸ்ரின் புஸ்பராஜ்*

## பன்முகத் திறன் கொண்ட நண்பன் றஞ்சித்

தோற்றத்தில் குட்டையும், எடையில் கனமும், ஆளுமையில் உயர்வும், துடிப்பில் வேகமும், பண்பில் மேலாளனும், அறிவில் சிறப்பும், தாய்க்கு மகனும், தம்பிக்கு அண்ணனும், நண்பர்களுக்குத் தோழனும், பணியில் கழைப்பின்மையும், ஏழைகளின் அன்பனும், கடமையில் கண்ணியமும், கடவுளுடன் நெருக்கமும் கொண்ட குருமணி அருட்தந்தை நீக்கிலாப்பிள்ளை பாக்கிய றஞ்சித்.

மெழுகுவர்த்தி தன்னை உருக்கிப் பிறருக்கு ஒளியாவதும், உப்பு தன்னைக் கரைத்து அறுசுவையாவதும் ஆயன் மடிந்து ஆடுகளைக் காப்பதும், தன் வாழ்வே அடுத்தவருக்கு வழியாவதும், சீடத்துவத்துக்குப் பெருமை சேர்க்கும் என்று இயேசு ஆண்டவர் கூறியது இவரது வாழ்வில் மெய்ப்பிக்கப்பட்டது.

1988 தை மாதம் இவருடன் ஆரம்பித்த பயணத்திற்கு 2007 புரட்டாதி மாதம் மானிடத்தை நேசிக்காத மனிதர்களால் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கடவுள் உன்னை நேசிப்பார். அவரது மடியில் உட்கார்ந்து இடைவிடாது அவரது புகழ் பாடிக் கொண்டிரு நண்பா. ஒரு நாள் நாமும் சந்திப்போம்.

*அருட்பணி அ.அகஸ்ரின்*

## மந்தைகளுக்காக மடிந்த நல்லாயன்

என்றும் புன்னகையோடும், துடிதுடிப்போடும், பணி ஆர்வத்தோடும் துலங்கியவர் எம் தோழர் அருட்பணி பாக்கியரஞ்சித்.

எல்லோராலும் மிகவும் அன்பு செய்யப்பட்டவர். தோழமை அன்புடன் குறும்பு செய்பவர், புனித பத்திரிசியார் கல்லூரியில் காற்பந்து விளையாடியவர். பொதுநலப் நற்பண்பும் அவரிடம் நிறைய இருந்தது. ஒரு சிறந்த அருட்பணியாளரை, நண்பரை நாம் இழந்திருக்கிறோம். நான் அவர் இறந்தபொழுது இந்தியாவிலே இருந்தேன். என் சகக் குருக்களிடம் அவரைப் பற்றிய விடயங்களைத் தொகுத்து எழுதவேண்டும். சிறப்பாக ஒரு நிகழ்வு ஒன்று வைக்க வேண்டும் என்று விரும்பினேன். அது அன்று கைகூடவில்லை.

இப்பொழுது அவருடைய 10 ஆண்டு பணி செய்த குருத்துவமும், மரணித்த 15 ஆண்டுகளும் சேர்ந்து 25 வருட யூபிலியை நாங்கள் நினைவு கூருகின்றோம்.

அவரது அன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனை மன்றாடுகின்றோம்.

*அருட்பணி றெனால்ட் A.ஜோர்ஜ்*

# காவலன் கலசம்




*(05.06.2022 பத்திரிகையின் தொடர்ச்சி)*

**யாழ் திருத்தூது முதல்வராக ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. (1868-1883)**



ஆயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் அ.ம.தி. யாழ்ப்பாணதிருத்தூது முதல்வராக (1868-1883) கொழும்பு திருத்தூது முதல்வராக (1883-1887) பின்னர் கொழும்பு அதி உயர் மறை மாவட்ட பேராயராக (1887 - 1892)

பேராயர் கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன ஜீன் அ.ம.தி. ஆண்டகை முதலில் ஆயர் செமேரியா வின் வலதுகரமாக இருந்து செயற்பட்டபின் அவரைத் தொடர்ந்து யாழ் திருத்தூது மாவட்ட ஆயராக, திருத் தூது முதல்வராக ஆயர் செமேரியா இறைவனடிசேர

**அருட்பணி S.V.B. மங்களராஜா**

1868ல் நியமனம் பெற்று 1883 வரை யாழ் திருத்தூது முதல்லராகவும், பின்னர் (தெற்கு) கொழும்பு திருத்தூது மாவட்டத்திற்கு மாற்றப்பட்டு அங்கு திருத்தூது முதல் வராக 1883ல் பொறுப்பேற்றார். பின்னர் 1887ல் இலங்கைத் திருஅவை சுயமாக இயங்கும் நிர்வாகக் கட்டமைப்பாக ஏற்படுத்தப்பட்டு கொழும்பு அதியுயர் மறை மாவட்டமாகவும், யாழ்ப்பாணம் உட்படமற்ற திருத்தூது மாவட்டங்கள் மறைமாவட்டங்களாகவும் ஏற்படுத்தப்பட்டன. 1887ல் இருந்து 1892 வரை (இறப்புவரை) கொழும்பு அதியுயர் மறை மாவட்டப் பேராயராகவிருந்தார்.

**பிறப்பும் ஆரம்ப வாழ்வும்**

கிறிஸ்தோப்பர் ஏணஸ்ற் பொன்ஜீன் பிரான்சிலுள்ள கிளேர்மொண்ட் - பெராண்ட் (Clermont-Ferrand) மறைமாவட்டத்திலுள்ளறியோம் (Riom) என்னுமிடத்தில் 1823ம் ஆண்டு செப்ரெம் பர் மாதம் 23ம் திகதி பிறந்தார். அடுத்த நாள் மார்துறே (Marthuret) என்னுமிடத்திலுள்ள அன்னை மரியாள் ஆலயத்தில் திருமுழுக்குப் பெற்றார். இவரது தந்தையார் ஜோண் பப்ரிஸ்ட் பொன்ஜீன் றியோம் நகரிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றில் ஒருவழக்கறிஞராகப் பணியாற்றி னார். இவர் ஒருநேர்மையான, நெறிமுறைகளைக் கடுமையாகப் பின்பற்றும் ஒழுக்கமும், கட்டுப்பாடும் தவறாத உண்மை தவறாத புத்திசாதுரியமுள்ள கண்ணியமான மனிதர். இவர் தனது மூத்த மகன் தன்னைப் போல தமது நாட்டின் நீதித்துறையில் ஒரு மதிப்பு வாய்ந்தவராக வருவார் என்று நம்பியிருந் தார். அவரது தாயார் இவோன் டார்டிவ் (Yvonne Tardif) அவர்களும் ஒரு மென்மையான பண்பும், பாசமும் நிறைந்த பெண்மணி. ஆயினும் எந்த சமயத்தையும் பின்பற்றாது அந்நாட்களில் (பிரெஞ்சுப் புரட்சியைத் தொடர்ந்து வந்த காலம்) பிரபல்யம் பெற்றிருந்த வோல்டயரின் (Voltaire) தத்துவத்தைப் பின்பற்றுபவர்களாயிருந்தனர். ஏணஸ்ற் பொன்ஜீன் மூன்று பிள்ளைகள் உள்ள அக்குடும்பத்தின் இரண்டாவது பிள்ளையாக விருந்தார். அவரது மூத்த சகோதரி எமிலி அவருக்கு இரண்டு வருடங்கள் மூத்தவர். அவருக்குப் பல வருடங்கள் பின்பு பிறந்த அவரது இளைய சகோதரர் பெயர் எமில்.

இளம் வயதில் ஏணஸ்ற் பொன்ஜீன் துடுக்குத் தனம் மிகுந்த,பயமறியாத,எடுத்ததற்கும் வம்புக் கிழுக்கும், ஒருவிதத்தில் புரட்சிப் போக்குடைய குறிப்பாக படிப்பு விடயத்தில் தமது இக்குண நலன்களை வெளிப்படுத்தி வந்தார். இக்காலத்தில் இவரது புத்திக்கூர்மை அவ்வளவு வெளிப்பட்டதாகச் சொல்ல முடியாது. எனவே இவரது தந்தை எடை தயும் காத்திரமாக எடுக்காத இந்த மகனை என்ன செய்வதென்று தெரியாதிருந்தார். இவரது தாயாரும் தனது மகனைப் பற்றிக் கவலையுடையவராகவே யிருந்தார். ஆயினும் இவரது மூத்த சகோதரிதான் இவருக்கு ஒருகாவல்தூதர் போலவிருந்து பல தடவைகள் இவர் தமது வாழ்க்கையில் படுகுழியில் விழுவதிலிருந்து காப்பாற்றியுள்ளார் என்று கூறவேண்டும்.

**அழைத்தல் வாழ்வு**

எமிலிக்கும் ஏணஸ்ற்றுக்கும் பகுத்தறியும் வயதுவந்ததும் அவ்விடத்துப் பங்குத்தந்தை மைக்கல் டெவால் (Fr. Michael Deval) அடிகளிடம் முதல் நன்மை பெறுவதற்கு ஆயத்தம் செய்ய அனுப்பிவைக்கப்பட்டனர். பக்தியுள்ள முன் மாதிரி கையான வாழ்வு வாழ்ந்து வந்த அப்பங்குத்தந்தை யின் மறைக்கல்வி வகுப்புக்களும் அறிவுரைகளும் இளம் ஏணஸ்ற்றின் வாழ்வில் ஒரு புதிய பரி மாணத்தை வெளிப்படுத்தி அவர்முன் ஒரு புதிய உலகத்தைக் கொணர்ந்தது என்று தான் சொல்லவேண்டும். (தொடரும்...)

# 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

## செபம்

**183."எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்" என்ற செபத்தினூடாக நாங்கள் எதற்காக வேண்டுகின்றோம்?**

'எங்களை சோதனைக்கு உட்படுத்தாதேயும்' எனக் கூறுகின்றபோதுநாங்கள்சோதனையில்விழுந்துபாவம்செய்யா திருக்கத் தேவையான அருளை எங்களுக்குத் தரும்படியாக மன்றாடுகின்றோம்.

**184."தீமையிலிருந்து எங்களை விடுவித்தரு ளும்" என்று சொல்லுகிறபோது நாங்கள் எதற்காக மன்றாடு கின்றோம்?**

'தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும்' என்று சொல்லுகிறபோது எமது ஆன்மாவிற்கும் உடலிற்கும் எதிரான தீமைகளிலிருந்து எங்களை விடுவித்தருளுமாறு மன்றாடு கின்றோம்.

**185.விண்ணகத் தூதர்களும் புனிதர்களும் எமக்காக மன்றாடும்படி ஏன் அவர்களை வேண்டுகின்றோம்?**

விண்ணகத்தூதர்களையும், புனிதர்களையும் எங்களுக் காக மன்றாடும்படி வேண்டுகின்றோம். ஏனெனில் அவர் கள் எங்களது நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் இருக் கின்றனர். அத்தோடு அவர்களுடைய செபங்கள் இறைவன் முன்னிலையில் வல்லமை உள்ளவையாகக் காணப் படுகின்றன.

**186. மண்ணுலகில் நடைபெறுபவை விண்ணகத் தூதர்க ளுக்கும் புனிதர்களுக்கும் தெரியும் என்பதை எவ்வாறு காண்பிப்பீர்?**

கிறிஸ்துவின் வார்த்தைகளிலிருந்து மண்ணுலகில் நடை பெறுபவை விண்ணுலகத் தூதர்களுக்கும் புனிதர்களுக்கும் தெரியுமென்பதைக் காண்பிக்க முடியும், "அவ்வாறே, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து "கடவுளின் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" (லூக். 15:10).

**187."எங்களுக்கெதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன்னிப்பதுபோல் எங்கள் குற்றங்களையும் மன்னியும்" என நாம் எதற்காகச் செபிக்கின்றோம்?**

'எங்களுக்கெதிராக குற்றம் செய்தோரை நாங்கள் மன் னிப்பதுபோல் எங்கள் குற்றங்களையும் மன்னியும்' என நாங் கள் கூறுகின்றபோது மற்றவர்கள் எங்களுக்கெதிராகச் செய் யும் பாவங்களை நாங்கள் மன்னிப்பது போல நாங்கள் இறை வனுக்கெதிராகவும்அயலவர்க்கெதிராகவும் செய்யும் பாவங்களை மன்னிக்கும்படி செபிக்கின்றோம்.

**188. அருள்நிறை மரியே என்ற செபத்தைத் தருக?**

அருள்நிறை மரியே வாழ்க, ஆண்டவர் உம்முடனே பெண்களுள் ஆசி பெற்றவர் நீரே, உம்முடைய திரு வயிற்றின் கனியுமாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே.

புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக் கொள்ளும். ஆமென்.

# தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

**15**

நான் குருவாகி ஓர் இறையியலாளராக
உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும்
ஆசிய நாடுகளின் அடிப்படையிலும்,
எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல்
சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன்.
அவற்றை இங்கே தருகின்றேன்.

*- mUl;gzp v];.N[.,k;khDNty;*

## அத்தியாயம் 8



**கிறிஸ்தவ ஆலயங்களின் பொருளென்ன? நோக்க மென்ன? யூத மக்களின் ஜெருசலேம் ஆலயத்தை, உரிமையுடன் - என் பிதாவின் வீடு - என்று அழைத்த இயேசு, தன்னுடைய இன்றைய சீடர்களின் ஆலயத் தைப் பற்றி என்ன கூறுவார்?**

மக்களும் குருவும் சேர்ந்து கூட்டுப்பலியாக ஒப்புக் கொடுக்கின்றோம். நல்லது. அதற்கு உகந்த பாடல்களைத் தமி ழிலே அழகாகப் பாடுகின்றோம் எங்களுடைய கலைகலாசாரத்திற்கு அமைய அதற்கு இசைய நாங்கள் எத்தனையோ அழகான காரியங்களைச் செய்கின்றோம்.

ஆனால் அவைகள் மத்தியிலும் நாங்கள் ஒரு வினாவை எழுப்ப வேண்டும். நாங்கள் செய்து கொண்டிருக்கும் இந்த மாற்றங்கள், எங்கள் கரிச னைகள் சிலவேளைகளிலே எங்கள் வழிபாட்டின் மையப்பொருளாகிய வார்த்தையையும் அந்த நற் கருணைப் பகிர்வையும் மழுங்கடிப்பதாக இருக்கின்றனவா என்பதைக் கேட்க வேண்டும். சிலவேளைகளில் நாங்கள் பண்பாட்டு மயமாக் குதல் என்ற போர்வையில் அளவுக்கு மிஞ்சிய விதமாக எங்களு டைய கவனத்தை கரிசனையை - பாத்திரங்களிலேயும் அதற்குக் கீழுள்ள அலங்காரங்களிலும் பக்க வாத்தியங்களிலேயும் கமராக் களிலேயும் செலவழித்துவிட்டு, அந்த மையப்பொருளான ஆண்ட வருடைய வார்த்தைக்கும் நற்கருணைக்கும் முக்கியத்துவத்தைக் குறைத்து விடுகின்றோம். ஆகையினால்தான் நாங்களும் கவனமாக இருக்கவேண்டும்.

எங்களுடைய திருச்சபையின் சாராம்சத்தை - கிறிஸ்து கொண்டு வந்த அந்த இரண்டு செல்வங்களையும், அதாவது அவருடைய வார்த்தையையும் அவர் எங்களுக்காக அர்ப்பணித்த அந்த உடல் இரத்தத்தையும் - நாங்கள் மழுங்கடிக்காது, எங்களுடைய வழிபாடுகளை வழிபாடு களாக இறைவனை மையமாகக் கொண்ட வழிபாடுகளாக, பொருட்களில் அல்ல அலங்காரங் களில் அல்ல பக்கவாத்தியங்களில் அல்ல, மாலைகள் பொன்னாடைகள் சுற்றுப்பிரகாரங்க ளில் அல்ல, அவைகளுக்கு அளவளவாக இடங்கொடுத்து, மையப்பொருளைத்தான் சிறப்பிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் உரிய நேரம் கொடுத்து இறைவனின் செய்தியைத் தெளிவாக மக்களுக்குப் பகிர்ந்துகொள்ள வேண்டும், நற்கருணை விருந்தையும், பயபக்தியுடன் அதற்குரிய வணக்கத்துடன் செய்ய நாங்கள் முன்வரவேண்டும்.

ஆகையினால் தான் இன்று எங்களுடைய கோவிலில் பெருநாள் திருவிழாக்களில் எத்தனையோ விதமான சடங்குகள் வைபவங்கள் கொண்டாட்டங்கள் நடக்கின்ற வேளையில் நாமும் அவைகளையிட்டுக் கேள்வி எழுப்புகின்றோம்.

இந்தத் திருவிழாக்கள் எங்களுடைய தமிழ் மக்களுடைய தமிழ்ப்பண்பாட்டு மயத்திலே அது ஒரு பெருவிழாவாக, மக்களின் ஒரு விழாவாக, இறைவனை மையமாகக் கொண்டு அல் லாமல், குருக்களையும் மக்களையும் போற்றும் விழாவாக, அவர்களுக்குள்ளே பண்டமாற்றம் செய்யும் வியாபார விழாக்களாக மாறாதிருக்க நாங்கள் மிகவும் கவனமாயிருந்து எத்தனையோ கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்து தவிர்க்க வேண்டியவைகளைத் தவிர்த்து முக்கியமானவை களை சமநிலைக்குக் கொண்டு வந்து திருவிழாக்களை நாங்கள் திருவிழாக்களாகக் கொண்டா வேண்டும்.

நாங்கள் ஏதோ மதுபானம் குடித்தவர்கள் நேராக நடக்க முடியாது அங்குமிங்கும் தள் ளாடிச் செல்வதுபோல, சில வேளைகளில் சென்று கொண்டிருக்கலாம். எங்களுடைய வரலாற் றிலே. ஆனால் ஒரு குடிகாரன் என்னவிதமாகத் தள்ளாடினாலும் முன்சென்று பின்வந்து நடை போட்டுத் தள்ளாடினாலும், அவன் தன்னுடைய திசையை இழக்காது தனது வீடு, குடும்பம் இருக்கும் திசைநோக்கிச் செல்வது போன்று, மக்களும் தமது வாழ்க்கையின் இலட்சியத்தை நோக்கி, சரியான திசைநோக்கிச் செல்லவேண்டும்.

இவ்வுலக சமூக அரசியல் வாழ்விலும், மனிதன் தனித்துவமாக, மதிப்புடன் உரிமைக ளுடன் தனது உண்மையான மதிப்பிலே வாழவேண்டும் என்ற தாகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். (தொடரும்....)

# குடும்பங்களை வடிவமைக்கும் சிற்பிகள் திருக்குடும்ப சபைக் கன்னியர்கள்




குடும்பம் என்பது சமூகவியல் பார்வையில் அது ஒரு நிறுவனம். இந்தக் குடும்பம் என்ற நிறுவனத்தில் பல்வகையான பரிமாணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மனிதன் என்ற உயிரி மலரத் தொடங்குவதே குடும்பம் என்ற நிறுவனத்தின் நெருக்கமான உறவுக்கட்டமைப்பில்தான். குடும்பம் என்பது வயது வந்த ஓர் ஆணும் பெண்ணும் தம் பாலியல் உறவுப் பரிமாற்றங்களை ஆரோக்கியமானமுறையில், சமநிலை ஆளுமைப் பண்புகளுக்கு உட்படுத்தி வாழும் ஓர் அழகான வாழ்க்கைக் கோலங்கள் என்றும், இது ஒரு இயற்கையான படிமுறை என்றும் கூறுகின்றது சமூகவியல். இன்னுமொருவகையில் சொல்லுவதென்றால், குடும்பம் என்பது மனமொத்து வாழவிரும்பும் ஓர் ஆணும் பெண்ணும் உயிர்த்துடிப்புடன் தம் பாலியல் உறவுகளைப் பகிர்ந்து வாழ ஊராரின் அல்லது சமூகத்தின் முன்னிலையில் ஒன்றாய்க் கூடிப் பெறும் அனுமதி அல்லது சம்மதம் என்று கூறிவிடலாம் என்கிறார்கள் ஒரு சில சமூகவியல் ஆய்வாளர்கள்.

இறைவார்த்தையின் ஒளியில் நாம், குடும்பம் என்கின்ற நிறுவனத்தை அலசும் போது தொடக்கநூலின் முதல் அலகு. மனிதன் தான் உணரும் தனிமையைப்போக்கத் தனக்குத் தகுந்த துணையைத் தேடுபவனாய் காட்டப்படுகின்றான். *(தொ.நூ 2:18-20)* பெண், ஆண் பெறும் உயர்ந்த கொடையாக அவனுடைய ஏற்ற துணையாய் கருதப்படுகின்றான். (சீரா. ஞா 36:24) தொடக்கத்திலிருந்தே வரும் இறைத்திட்டத்திற்குத் தாயும் தந்தையும் தான், உடல் உருக்கொடுக்கிறார்கள். இவர்கள் இறைவனது படைப்புச் செயலின் உயிருள்ள ஆற்றல்மிகு உரு'வாகவும் காணக்கூடிய அடையாளமாகவும் உள்ளார்கள் (அன்பின் மகிழ்ச்சி என் - 10) இருவரும் இணைந்து உருவாக்கும் குடும்பத்தில் அவர்கள் உள்ளமும் உடலும் நெருக்கமாக இருப்பது போன்று, நடைமுறை வாழ்க்கையிலும் மன ஒருமைப்பாட்டுடனும் ஒத்திசைவுடனும் இருப்பார்கள். இவ்வாறு அவர்கள் ஓர் உடலாக மாறுகின்றனர். பெற்றோர் அடித்தள மென்றால் குழந்தைகள் அக்குடும்பத்தின் 'உயருள்ள கற்கள்' போன்றவர்கள். இவர்கள்தான் குடும்பத்தின் தொடர்ச்சியான அடையாளமாக உள்ளார்கள். குடும்பந்தான் சமுதாயம் சார்ந்த செயற்பாடுகளுக்கான முதன்மைக் காரணியும் ஆகும்.

எனவேதான் இல்லம் என்பது இறைநம்பிக்கையின் பொருளையும் அழகையும் பாராட்டவும் இறைவேண்டல் செய்திடவும் அடுத்தவர்களுக்கு தொண்டாற்றவும் கற்றுக்கொடுக்கும் இடமாக அமைய வேண்டுமென அன்பின் மகிழ்ச்சி எண் 289 கூறுகின்றது. 'குடும்பங்கள் அனுபவிக்கும் அன்பின் மகிழ்வு திருஅவையின் மகிழ்வாகவும் உள்ளதென அன்பின் மகிழ்ச்சி என்று சுற்றுமடல் எண் 1 இல் நம் திருத்தந்தை கோடிட்டுக் காட்டுகின்றார். சூழலியல் அமைப்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடி மானிட சமூகத்திலும் அதன் விழுமியங்களிலும் அதன் பண்பமைதிகளிலும் நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. சூழலியல் நெருக்கடிக்கான நமது பதிலிறுப்பு, சமூக வெளிப்பாடாக நமது சமூகக்கட்டமைப்பின் மீதும் விழுமியங்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது. அதற்கான வழிமுறைகளை நாம் கையாள வேண்டிய காலத்தில் இருக்கின்றோம். இயற்கையின் தெயக்கத்திற்கு நம்மை முழுமையாக அர்ப்

**அருட்சகோதரி நெவிஸ் லடிஸ்லாஸ்**

பணம் செய்யவேண்டிய இடமும் குடும்பமே ஆகும். பூமித்தாயுடன் சரியான நல்லுறவுகளை நாம் ஏற்படுத்திக்கொள்ள பழகும் கற்றுக்கொள்ளும் இடமும் 'குடும்பமே' ஆகும்.

மனித வாழ்வு குடும்பத்தில் மொட்டாகி சமூகத்தில் மலர்ந்து உலகில் மணம் வீசுகின்றது. குடும்பம் என்பது பல்வகை பரிமாண வளர்ச்சியின் தொடக்கப் பள்ளியாகும். மனித மதிப்புகள், மனித உறவு-கள், அறநெறிக்கோட்பாடுகள், ஆன்மீக வழிமுறைகள், பழக்கவழக்கங்கள், துன்பதுயரங் கள், மகிழ்ச்சி, மனநிறைவுகள், வாழ்வின் அர்த்தங்கள் என்று அனைத்தையும் முதன் முதலில் ஒரு குழந்தைக்கு அறிமுகம் செய் யும் பல்கலைக்கழகமும் குடும்பமே ஆகும்.

குடும்ப வாழ்வு வளமடையும் போது தான் சமூகமானது வளர்ச்சியடைகின்றது. எங்கு குடும்பம் சிதைகிறதோ அங்கு சமூ கம் சிதறுகிறது, திசைமாறிச் செல்கிறது. குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை இது வானளாவிய மரமாக வளர்ந்தோங்க, குடும்பம் என்ற நிலத்திலே நல்விதைகள் விதைக்கப் படுகின்றன. நல்ல குடும்பங்கள் நற்செய்தியை உலகிற்கு அறிவிக்கும் முதன்மையான சிறந்த ஓர் ஊடகமாகும் குடும்பம்' என்ற அமைப்பே மானிடமாகும். அது மனிதத்தின் எல்லா நிலைகளுக்கும் அடிநாதமாக விளங்குகின்றது. இக்குடும்பம் என்ற நிறுவனம் அன்பாலும் தியாகத்தாலும் சுயநலமின்மையாலும் பாசப்பொழிவுகளாலும் முதிர்ச்சியான விட்டுக்கொடுப்பாலும் பகிர்தலாலும் கடினமான முயற்சியாண்மைகளாலும் உருவாக்கப்படுகின்றது.

ஒட்டுமொத்தமாக நோக்கின் எல்லாச் சமயங்களிலும் சமுதாய உயிர்ப்பூட்டலுக்கும் நிலைபேறான தொடர்ச்சியான பரிமாற்றங்க ளுக்கும் அடிநாதமாய் அமைவதும் குடும் பமே என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும்.

(தொடரும்...)

**அர்த்தமுள்ள ஆன்மீகம்**

# நலம் தரும் நம்பிக்கை

**அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்**




மனிதனின் இறை நம்பிக்கையீனங்களும், பாவத்தை நோக்கிய தீமைநிறைந்த வாழ்வும் அவ்வாறு மாறிவிட்ட மனிதனைப் படைத்ததற்காக இறைவன் மனம் வருந்தித் துயருறுவதை சென்ற இரண்டாம் பகுதிச் செய்தியில் பார்த்தோம். மனிதனது உள்ளச் சிந்தனைகள் படைத்தவரை மறந்து, இறைநம்பிக்கையின் உயர் பண்புகளை மறந்து, மனித விழுமியங்களை இழந்து, பாவத்தை நோக்கியே நடந்ததால், ஆண்டவர் "நான் படைந்த மனிதனை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன். வானத்துப் பறவைகள் வரை அனைத்தையும் அழிப்பேன்" என்று படைப்பு முழுவதையும் அழித்துவிட முடிவு செய்தார். இந்நிலையில் பாவ நிலையிலிருந்து எஞ்சியிருப்போர் எனக் கருதப்பட்ட நோவா என்ற ஒருவர்மீது ஆண்டவரின் பேரருட் பார்வைபட்டது.

அக்காலத்தில் எஞ்சியிருந்தோர் எனப்படுவோருள் நோவா நேர்மையாளராகவும் குற்றமற்றவராகவும் இருந்தார். நோவா கடவுளோடு இருந்தார். பழைய ஏற்பாட்டுக்காலத்தில் கடவுளோடு இருத்தல் என்பது, அந்த அளவுக்கு எளிதான காரியமல்ல. மண்ணுலக மக்கள் அனைவரிடையேயும் சீர்கேடும் வன்முறைகளும் மேலோங்கி நின்றபோதும்கூட, கடவுளின் பார்வையில் நேர்மையாளராகத் தென்பட்டவர் நோவா. கடவுளின் கண்களுக்கு நேர்மையாளராகத் தெரிந்தார் என்றால், அவரிடம் இறைவன் மீதான ஆழமான நம்பிக்கை, அன்பு, நீதி, உண்மை, நேர்மை முதலான அனைத்துத் தூய பண்புகளும் நிறைந்து நிலைத்து நின்றிருக்கும். இறைவன் எதிர்பார்க்கும் நேர்மையாளருக்கான, நம்பிக்கையாளருக்கான தகுதிகள் அத்தனையும் இருந்திருக்கும். வேதம் கூறும் 'கடவுளோடு இருந்தார்' என்ற வார்த்தைகளை உற்றுநோக்கும் போது, மேற்படி தகுதிகள் அவருக்கு இருந்திருப்பது புரியும். இவ்வாறான ஒருவருக்கு ஆண்டவர் சொல்லுக்கு அடி-பணியும் மனோ நிலையும் நிச்சயமாக இருந்திருக்கும். அதனால்தான் ஆண்டவரின் அருட்பார்வை பாவப்பட்ட உலகில் அவர்மீது மட்டும் விழுகிறது. அதனால் முழு உலகையும் வேரோடு அழித்து, புதிய உலகைப் படைப்பதற்குப் பதிலாக 'நோவா' என்ற நேர்மையான நம்பிக்கையாளர் ஊடாக உலகில் புதிய தலைமுறை-றயை ஏற்படுத்த கடவுள் முடிவுசெய்தார்.

"என் முன்னிலையிலிருந்து மனிதர் எல்லோரையும் ஒழித்துவிடப்போகிறேன். உனக்காக கோபர் மரத்தால் பேழை ஒன்று செய்" என்று அதற்கான அமைப்பு, அளவு, நீள, அகல, உயரம் போன்ற அனைத்து விதிமுறைகளையும் கூறி அதற்குள் புதிய உலகின் விருத்திக்காக பறவைகள் விலங்குகளை ஏற்றி, உன் குடும்பத்தாரையும் அதனுள் ஏற்றி வெள்ளப்பெருக்கில்நின்று உயிர்பிழைக்குமாறு பணிக்கிறார். நோவா ஆண்டவர் தமக்குக் கட்டளையிட்டபடியே பேழையைக் கச்சிதமாகச் செய்து முடித்தார்.

ஆண்டவர் கட்டளையிட்டபடி அனைத்துப் பறவைகள் விலங்குகளை ஏற்றி, தனது குடும்பத்தையும் அதனுள் உட்புகச் செய்து பேழையை மூடிக் கொண்டார். 40 நாள் வெள்ளப்பெருக்கால் மலைகளை மூடி எழுந்த வெள்ளப் பெருக்கினால் பேழை மிதந்தபோதும் மண்ணோடு அழிந்துபோன தனது உறவுகளையோ பரந்து வாழ்ந்த மனித குலத்தையோ எண்ணாமல் பேழை தாழுமோ, தப்புமோ, அலையுமோ, அலைக்கழியுமோ, எங்கு ஒதுங்குமோ என்ற எந்த அச்சமும் கலக்கமும் இன்றி, இறை நம்பிக்கையில் உறுதிபெற்று, இறைவன் காட்டுவதே வழியென்று பேழையோடு மிதக்கிறார். 150 நாட்களில் வெள்ளம் காய்ந்து, பேழை கரை ஒதுங்குகிறது. அப்போது நோவாவை நினைவுகூர்ந்து ஆண்டவர் அவரைப் பேழையிலிருந்து வெளியே வரச்செய்து 'இனி உலகம் வெள்ளத்தால் அழிக்கப்படமாட்டாது' என்று ஓர் உடன்படிக்கை செய்து கொள்வதையும் நாம் வேதத்தில் பார்க்கிறோம். இன்றைய உலகிலும் இறைவனுக்கு ஒவ்வாத பாவங்களும் வன்முறைகளும் எல்லை கடந்த தீமைகளும் உச்சமாகக் காணப்படுவதை நாம் காண்கிறோம் அதற்குள்ளேயே வாழ்ந்தும் பழகிவிட்டோம். இதன் விளைவாக உலகெங்கும் யுத்தங்களும் பேரழிவுகளும் நோய்களும் பஞ்சம், பசி, பட்டினியும் ஏற்பட்டுக்கொண்டிருப்பதையும் நாம் கேட்டும் பார்த்தும் அனுபவித்தும் வருகிறோம். இவைகூட இறைகோபத்தின் அறிகுறிகளா என சில வேளைகளில் எண்ணத் தோன்றுகிறது. இவற்றுக்கு மத்தியிலும் இறை இரக்கத்தின் கரங்களும் இறையன்பின் அரவணைப்பும் மனந்திரும்பமாட்டாயா? என்ற அவரது அழைப்பின் குரலும் ஒலித்துக் கொண்டேதான் இருக்கிறது. அதை உள்வாங்கக்கூடிய இறை நம்பிக்கையும் ஆன்மீக உணர்வும் மனிதனிடமிருந்து முற்றாக அற்றுப்போய்விட்டதா? என்று எண்ணத் தோன்றுகின்றது. இதற்குக் காரணம் நவீன உலகின் நம்பிக்கைகள் அனைத்தும் உலக காரியங்கள் மீதும் உலகின் நவீன - சமூக - விஞ்ஞான - இலத்திரனியல் படைப்புக்களுக்குள்ளும் ஈர்க்கப்பட்டுவிட்டதால், கடவுளின் பக்கம், ஏன் தனது ஆன்மாவின் பக்கம்கூட திரும்பிப் பார்க்க முடிவதில்லை. தனி மனிதப் படைப்புக்கள் மனிதனால் ஆளப்படுவதற்குப் பதிலாக, அவையே மனிதனை ஆட்டிப்படைத்து வருவதால் மனிதன் அவற்றால் கட்டுண்டு அவற்றிற்கு அடிமையாகி விட்டான். கைத்தொலைபேசியைக் கை-விடமுடிய வில்லை, தொலைக்காட்சியைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை, மது, மாது, போதைவஸ்து, சண்டை சச்சரவு இல்லாமல் வாழமுடியவில்லை. இவற்றுக்குள்ளிருந்து நோவாவைப் போன்ற ஒரு நேர்மையாளரை, நம்பிக்கையாளரை இறைவன் எப்படி இனங்கண்டுகொள்ளமுடியும்? நோவாவைப் போல் நேர்மையிலும் இறைநம்பிக்கையிலும் எதிர்கால சந்ததிக்கு முன்னுதாரணமாகக் காட்டமுடியும்? இதை உணர்ந்தவர்களாய் நமது ஆன்மாவை சுய ஆய்வுசெய்து இறைவன் பக்கம் திரும்ப, நமது மனங்களை மாற்றிப் பயணிப்போம், இறை நம்பிக்கை தொடர்பான அடுத்த செய்தியில் உங்களைச் சந்திக்கும்வரை....

# "கனவு காண்போம்" 03

கரைவையூர்ச் செல்வம்




(சென்ற இதழ்த் தொடர்ச்சி....)

## மொழிக் குழப்பம்

இரண்டாம் ஜோண் போல் அவர்களுடைய நீண்டகால ஆட்சிக்குப் பின்னர், அவரது கொள்கைகளை, ஆட்சிமுறையை, பிற்போக்கு வாதத்தை மேற்கொண்டு நீடிக்க, ஓர் இறுகிய கட்டுப்பாட்டுக்குள் திருஅவையைத் தொடர்ச்சியாக வைத்திருக்கத் தகுதியானவர் கருதினால் றட்சிங்கரே என்ற சிந்தனையில் அவரையே திருத்தந்தையாகத் தேர்வு செய்தனர். அதற்கென்றே கூடிவந்த கருதினால் மார்கள் இவர், பதினாறாம் பெனடிக்ற் என்ற பெயருடன் திருஅவையின் ஆட்சிப் பீடம் ஏறினார்.

எதிர்பார்ப்பிற்கேற்ப இவரது ஆட்சியில் மாற்றுச் சிந்தனைக்கு இடமிருக்கவில்லை. புதிய சிந்தனைக்கு இடமிருக்கவில்லை. இவ்வளவிற்கும் ஜேர்மனியில் உள்ள ஒரு பிரசித்தி பெற்ற பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கற்றுக் கொடுத்த பொழுது இவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளராகவே திகழ்ந்தார். அந்தப் பல்கலைக்கழகத்தில் அப்பொழுது நடைபெற்ற மாணவர் கிளர்ச்சிக்கும், ஆர்ப்பாட்டத்திற்கும், கல்விப் பகிஷ்கரிப்பிற்கும் தானும் பொறுப்பேற்க வேண்டுமென்று எண்ணி, தன்னையே நொந்து தனது சிந்தனைப் போக்கில் ஒரு பாரிய மாற்றத்தை உருவாக்கினார். இச் செய்தியை ஒரு கட்டுரையில் படித்த ஞாபகம். ஜேர்மன் நாட்டவரும், றட்சிங்கரின் நண்பருமான ஒரு குருவானவரை இங்கிலாந்தின் மார் கேற்றில் நான் சந்தித்த பொழுது, எனது கேள்விக்குப் பதிலாக அவர் மேற்கூறிய செய்தியை ஊர்ஜிதப்படுத்தினார்.

இந்தத்தருணத்தில்தான் இவரை இரண்டாம் ஜோண்போல் வத்திக்கானுக்கு அழைத்து, பொறுப்பான பதவியொன்றைக் கொடுத்தார். திருஅவையின் படிப்பினைகள், பாரம்பரியங்கள் போன்றவற்றைக் காப்பாற்றும் பொறுப்பை இவருக்கு வழங்கினார். இப்பொறுப்பில் றட்சிங்கர் இருந்த பொழுது சில முற்போக்குச் சிந்தனையுடைய இறையியலாளர்கள் திருஅவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இலத்தீன் அமெரிக்காவில் உருவான விடுதலை இறை இயல் மேற்கொண்டு வளராமல் தடுக்கப்பட்டது. அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த இந்நாட்டு அருள்திரு திஸ்சா பாலசூரியா அவர்களும் இவரால்தான் திருஅவையில் இருந்து வெளியேற்றப்பட்டார். இவர், பின்னர் திருஅவையுடன் ஒப்புரவாகி மீண்டும் திருஅவையுள் உள்வாங்கப்பட்டார். இது இன்னோர் கதை!

## புரியாத புதிர்

புதினாறாம் பெனடிக்ற் பிற்போக்கு வாதத்தைக் கடைப்பிடித்து, பாரம்பரியத்திற்குத் திரும்பியதும் இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பிருந்த இலத்தீன் மொழியையும் அதனுடன் இணைந்திருந்த திருவழிபாட்டு உடைகளையும் இவர் அணிய முற்பட்டது. ஒரு புரியாத புதிராகவே உள்ளது. இதைப் பற்றி இவர் காலத்தில் ஜேர்மன் நாட்டு அதே பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய உலகப் பிரசித்தி பெற்றவரும் விரிவுரையாளரும், எழுத்தாளருமான கான்ஸ் குயுங் அவர்கள் விசாரித்தபொழுது, பெனடிக்ற் திருத்தந்தையிடமிருந்து ஒரு புன்னகையே பதிலாக வந்ததென ஊடகங்கள் எழுதியிருந்தன. 'இலத்தீன்' பிரச்சினையல்ல!

இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பிருந்த திருஅவையின் ஒரே மொழியான இலத்தீன் மொழியைப் பயன்படுத்துவது அல்ல பிரச்சினை. இன்று திருவழிபாட்டில் பல்வேறு மொழிகள் பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், இலத்தீன் மொழியோடு கூடிய திருவழிபாட்டு உடைகள், சடங்குகள், ஒரு வெற்றிவாகையுடைய போக்குத் தென்பட்டது. இதனை ஒரு கூட்டம் வளர்க்கத் தொடங்கியது. அந்தப் பணி பண்புமையுடன் ஓர் அதிகார ஆணவப் போக்கும் ஆட்சிமுறையும் குருத்துவக் கலாசாரமும் (Clerical culture) இணைந்து கொண்டது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இவை ஒன்று சேர்ந்து இரண்டாம் வத்திக்கான் கொண்டு வந்த பெரிய மறுமலர்ச்சியை மறுப்பது போன்றே தோன்றுகின்றது. அதேவேளை இரண்டாவது வத்திக்கான் சங்கம் கொண்டு வந்த மறுமலர்ச்சியைப் பெரும்பான்மையான கத்தோலிக்க மக்கள் ஆர்வத்தோடு வரவேற்றுள்ளார்கள்.

## குருத்துவக் கலாசாரம்

குருக்கள், தாங்கள் ஒருமேலோங்கிய வர்க்கம், தாங்கள் சட்டங்களுக்கு மேம்பட்டவர்கள், தாங்கள் தவறுகள் செய்தாலும் தண்டனைக்கு உட்படுத்தப்படாதவர்கள், அவை மூடி மறைக்கப்படவேண்டியவை, தங்களுக்கு முன்னுரிமை கொடுத்து சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று வாழ்பவர்கள். சுருக்கமாகக் கூறினால், "நாங்கள் ஏனையவர்களைப் போலல்ல" என்ற ஓர் உயர்வு மனப்பான்மை கொண்டவர்கள். இயேசுவின் காலத்துத் தலைமைக் குருக்கள் போன்றவர்கள். இயேசு அவர்களை எப்படிப் பார்த்தார் என்பது நற்செய்திகளில் தெளிவாக உண்டு. பழைய ஏற்பாட்டு லேவியர் கூட்டம் போன்றவர்கள். இதையே குருத்துவக் கலாசாரம் என்று அழைக்கப்பட்டது.

ஏன்? தமிழ்ச் சமூகத்தின் தொன்மையான சைவத்தில் பிராமணர்கள் தங்களை உயர்த்தி, ஏனையோரை மிகவும் தாழ்த்தி, ஆலயங்களில் கூட தீண்டாமையை வளர்த்தவர்கள். தமிழ் நாட்டில் இதை எதிர்த்துப் போராடியவர்கள் திராவிடக் கழகத்தினர். இவர்கள் ஓரளவு வெற்றிபெற்றாலும், பிராமணத்துவத்தை முற்றாக அழிக்கவில்லை. ஓர் இந்திய நாட்டுப் பெரியவரை அண்மையில் சந்தித்த பொழுது அவர் சொன்னார் : பிராமணத்துவம் மீண்டும் இந்தியாவில் வலுவாக வளர்கின்றது. பி.ஜே.பி. கட்சியுடன் இணைந்து வளர்கின்றது. பிராமணத்துவம் அரசியலுடன் கை கோர்த்தால், அது மக்களிடம் ஒரு பிரிவினையை மீண்டும் உருவாக்கும். இருக்கும் பிரிவினையை மேலும் விரிவாக்கி ஆழப்படுத்தும்.

சென்ற ஆவணி மாதம் (2022) போப் பிரான்சிஸ் நியமித்த இருபத்தொரு கருதினார்மார்களுள் இந்தியாவின் கைதராபாத் பேராயர் அந்தனி பூலா தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதை இவ்விடத்தே பதிவு செய்வது நலம்.

## குருமரபினரத்துவம் (Clericalism)

குருத்துவக் கலாசாரம் வேறு, குருமரபிரைத்துவம் வேறு. ஆயினும், இரண்டிற்கும் தொடர்புண்டு. குருமரபிரைத்துவம் நோய்வாய்ப்பட்டது. குருத்துவம் ஆரோக்கியமற்று இருப்பினும், நோய் வாய்ப்பட்ட தென்று கணிக்கப்படுவதில்லை. குருமர பினரத்துவம் குருத்துவக் கலாசாரத்திலிருந்தே தோன்றுகிறது.

குருத்துவத்தில் உள்ள ஒரு புனிதமான அதிகாரத்தைச் சேவைக் கெனப் பாராது (சேவைத் தலைமைத் துவம்) குருமரபினரத்துவம் அந்த "அதிகாரத்தை" துர்ப்பிரயோகம் செய்கின்றது. கனவு காண்போம் என்ற நூலில், போப் பிரான்சிஸ் குருமரபினரத்துவத்தை திருஅவையில் உள்ள "கான்சர் - புற்று நோய்" என்று வர்ணித்துள்ளார். இது ஒரு 'பழைய பாவம்' என்று கூறும் போப் பிரான்சிஸ், மக்களைத் தனது சொத்தாக்கி, அதன் எல்லைகளை உணராது, வெட்கத்தை இழந்து, மக்களை எப்படியும் பயன்படுத்தலாமென நினைப்பது குருமரபினத்துவம் என்று முடிக்கின்றார். இவர்கள், மனித மாண்பை மதிக்காது நடப்பவர்கள் என்று கூறி, இவர்களின் நடத்தையைப் பாலியல் துஷ்பிரயோகத்துடன் இணைத்து, போப் பிரான்சிஸ் குருமரபிரைத்துவத்தை வெகுவாகக் கண்டித்துள்ளார். இலத்தீன் மொழியுடன் இணைந்துவரும் பரிவாரங்களுடன் குருத்துவக் கலாசாரத்தையும் கூட்டியே போப் பிரான்சிஸ் பார்க்கின்றார்.

அதனால், அனைத்துக் குருக்களையும் குருமரபிரைத்துவத்துள் உள்வாங்கப்பட்டவர்கள் என்று முடிவு செய்வது பொதுமயமாக்கலாகும். அது ஒரு பாது காப்புக் கவசமாகும். காரணம், யதார்த்தம் வேறு, முழு அர்ப்பணத்தோடு வாழும் குருக்கள், பணிக் குருத்துவத்தில் தம்மை ஈடுபடுத்தி வரும் குருக்கள், பாதிக்கப்பட்ட மக்களின் குரலாக தீர்க்கதரிசனத்தோடு வாழும் குருக்களை நாம் நித்தமும் காண்கின்றோம். தியாக மனத்துடன் வாழ்ந்த, வாழும் குருக்களை நாம் பெருமையோடு பார்த்து வியக்கின்றோம். எண்ணிக்கையில் இவர்கள்தான் பலர். ஆனால், நாய் மனிதரைக் கடித்தால் அது செய்தி அல்ல, மனிதர் நாயைக் கடித்தால்தான் செய்தி என்று வாழும் ஊடகங்கள் ஒரு சிறுபான்மையை ஊதிப் பெரிதாக்கி, ஊடகங்களில் முக்கியத்தும் கொடுக்கின்றன. இது தான் யதார்த்தம். அதனால், குருத்துவக் கலாசாரத்தையோ, குருமரபினரைத்துவத்தையோ நியாயப்படுத்துவதல்ல, களைகள் அகற்றப்பட வேண்டும் என்பதில் திருஅவையில், போப் பிரான்சிஸ் அவர்களுடைய செயற்பாட்டில் இரு கருத்துக்கள் கிடையாது.

## 'இது தேவையா?'

'கனவு காண்போம்' 'ஒன்றாய்ப் பயணிப்போம்' என்ற தலைப்பில் எழுதும் கட்டுழைரத் தொடரில் இவற்றையெல்லாம் ஏன் எழுதவேண்டுமென்ற வினா எழலாம். ஒருவருடைய கனவை விரிவாகப் பார்ப்பதானால், அவருடைய கலை கலாசாரப் பின்னணியை, வரலாற்றுப் பின்னணியை, திருஅவையின் இன்றைய நிலையை உணராமல், அறியாமல் ஏதோ நேற்றிரவு கண்ட கனவெனப் பார்ப்பது அறிவுடமையாக, கனவை முழுமையாகப் புரியவும் முடியாது.

உளவளத்துறையில், துணை நாடி வருபவரின் கனவை அவரே புரிய வேண்டுமானால், அவருக்குத் துணை செய்ய வேண்டுமானால், துணை நாடி வந்தவரின் பின்னணி, சூழல் போன்றவற்றைக் கணக்கில் எடுக்காது, கனவை ஒரு வெற்றிடத்தில் வைத்துப் பார்த்து விளக்குவது உடன் பயணிப்பவரின் செயற்பாடாகாது. கனவு கண்டவரின் பின்னணியில் இருந்து கனவைப் பிரிக்கக்கூடாது.

இரவில் நாம் காணும் கனவுகள் ஆழ்மனதில் இருந்து வருபவை என்பது உள இயலாளரின் கூற்று. நடைமுறையில் உள்ள உலகை நன்றாகப் பார்த்து பரவலாகப் பார்த்து, அதேவேளை நடைமுறையில் உள்ள திருஅவையையும் பார்த்து ஒன்றோடு ஒன்றைச் சந்திக்க வைத்து, திருஅவையில் எப்படிப்பட்ட அடிப்படை மாற்றங்கள் தேவை என்பதைக் கடவுளின் பிரசன்னத்தில் உய்த்துணர்ந்து காணும் கனவு ஓர் இலட்சியக் கனவு. தூரத்துப் பார்வையோடு காணும் கனவு, திறந்த மனத்துடன், உண்மைத்தன்மையுடன், அயலவர் அன்புடன், கடவுளில் பதிந்து காணும் கனவு தான் போப் பிரான்சிஸ் அவர்களுடைய கனவு. இது, ஒரு பாரிய கனவு.

(கனவு வளரும்)

## வாழப்படாத கிறிஸ்தவம்

நீலத்தைத் தொலைத்த வானமதாய்
அன்பின்றி வெறுமையான உள்ளங்கள்!
ஆடம்பர உலகின் வீதியெங்கும்
ஏதேதோ தேடி அலைகிறது மானுடம்.

வெறுமையின் வெளிகளில்
காரிருள் படர்ந்து
அன்பற்ற மனங்களில்
அநீதியின் வேர்கள் - நீள
தன்னலத்தின் வேலிகளில்
துளிர்க்கிறது பாவம்.

அயலவன் பசிபோக்க நீளாத கைகள்
கொலைக்களத்தின் கூரிய ஆயுதங்களே!
இன்றைய விவாகரத்துக்கள்
நேற்றுவரையான விபச்சாரமே
வாழப்படாத கிறீஸ்தவம் சடங்குகளாகி
இன்னும் இயேசு
இறக்கிவிட எவருமின்றி
தொங்குகின்றார் சிலுவையிலேயே




# என் கேள்விக்கென்ன பதில்!

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

## அருட்பணி செ. அன்புராசா

(யோசப், யாழ்ப்பாணம்)

**கேள்வி: கணவன் மனைவியிடையே இப்போதெல்லாம் அடிக்கடி முரண்பாடுகள் முற்றிச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலையைக் கொஞ்சம் சரிசெய்வதற்கு என்ன செய்யலாம்?**

**ப:** நடை, இந்நடைமுறையைமாற்றும்என நினைக்கின்றேன் யோசப்! நூறு வயதான பெரியவர் ஒருவரிடத்தில் அவரின் நீண்ட ஆயுளுக்கான இரகசியத்தைப் பலரும் வினவினார்கள். அவரோ, 'என் நீண்ட ஆயுளின் இரகசியத்தை உங்களுக்குச் சொல்கின்றேன்!' என்று கூறிவிட்டுத் தன் மனைவியைச் சுட்டிக் காட்டி, 'நாங்கள் திருமணமாகி எழுபத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. எங்களுக்கிடையில் விவாதங்கள், கருத்து முரண்பாடுகள் வரும், வருகின்றபோது தோற்பவர் ஐந்து கிலோமீற்றர் நடக்கவேண்டும்' எனத் திருமணமான சில நாள்களில் நானும் என் மனைவியும் முடிவெடுத்தோம். காலோட்டத்தில் நான்தான் அடிக்கடி தோற்றுப்போவதால் ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் ஐந்து கிலோமீற்றர் நடக்கவேண்டி இருந்தது. அந்நடை என் உடல்நலத்திற்கும் மனநலத்திற்கும் காரணமாகி விட்டது!' என்றார். "அதுசரி, அதெப்படி உங்கள் மனைவியும் உங்களைப்போல நீண்ட ஆயுளுடன் நல்ல உடல்நலத்துடன் இருப்பதற்கான காரணம் என்ன?" எனத் தொடர் கேள்வியை எழுப்பினார்கள். அம்முதியவர் சிரித்துக்கொண்டு, 'இன்னுமொரு இரகசியத்தைச் சொல்கின்றேன்: தோற்றுப் போகின்ற ஒவ்வொரு தடவையும் நான் ஐந்து கிலோமீற்றர் நடக்கின்றேனா என்பதை உறுதிப்படுத்துவதற்கு அவளும் எனக்குப் பின்னே நடந்துவருவாள்!" என்றாராம். சேர்ந்து நடப்பது முக்கியம் யோசப்: பயணத்தின் போதும் உடற்பயிற்சியின் போதும் மட்டுமல்ல வாழ்க்கைப் பயணத்தின்போதும்!

(ரதி, மன்னார்)

**கே: மனிதர்களின் இன்றைய நடத்தைப் போக்கை அவதானிக்கின்றபோது சற்று விசித்திரமாக இருக்கின்றது! இன்றைய இப்போக்கை அவதானித்திருக்கின்றீர்களா?**

**ப:** அவதானித்திருக்கின்றேன் ரதி! உங்கள் அவதானிப்பைச் சரியாகப் புரிந்திருக்கின்றேன் ஏன் என்றால் சில நாட்களுக்கு முன் வாசித்த விடயம் உங்கள் கருத்தை உறுதிப்படுத்துவதாக அமையும்! "மக்கள் 'ஸ்மார்ட் போன்' வாங்கும் அளவுக்குப் பணக்காரர்களாகவும் கீரை வியாபாரியிடம் பேரம் பேசும் அளவுக்கு ஏழைகளாகவும் இருக்கின்றார்கள்!"இன்றைய போக்குப் புரிகின்றதா?

(சசி, யாழ்ப்பாணம்)

**கே: பதவிகளைப் பெறச் சிலர் மேற்கொள்கின்ற வேலைத்திட்டங்களைப் பார்த்தால் வேடிக்கையாகவும் வெட்கமாகவும் இருக்கின்றது! யாரையும் பிடித்து, எதனையும் செய்து, எப்படியாவது தாங்கள் நினைக்கும் பதவியை அடைந்துவிடுகின்றார்களே! இப்படிப்பட்டவர்களுக்கு வெட்கமே இல்லையா?**

**ப:** சசி, எதிலும் ஒரு கட்டத்திற்குப் பிறகு வேட்கம் இருக்காது என நம்பு கின்றேன்! "மூக்குக்கு மேல் ஏறினால் சாணென்ன முழமென்ன, எல்லாம் ஒன்று தான்" என்றொரு பழமொழி இருக்கின்றது. இப்பழமொழியின் நேரடிப் பொருள்: நீர் மட்டம் ஒருவரின் மூக்குக்கு மேல் ஒரு சாண் ஏறினாலென்ன முழமேறினால் என்ன மூச்சடங்கிப்போவது உறுதி! இப்பழமொழியை இங்கு வைத்துப் பார்த்தால் ஒரு கட்டத்துக்குமேல் வெட்கம் என்ற உணர்வை இழந்து விடுவார்கள்! எழுத்தாளர் அப்துல் ரகுமான் என்ற கவிஞர் தன்னுடைய ஒரு கவிதையில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை பற்றிக்கூறி இவ்வாசைகளெல்லாம் ஆசைகளே அல்ல இவற்றைவிட ஓர் ஆசையிருக்கின்றது அது 'சிம்மாசன ஆசை' என்ற பொருள்பட அக்கவிதையில் எழுதியிருப்பார். என்னைப் பொறுத்தவரையில் இச்'சிம்மாசன ஆசை", 'ஆசைகளின் ஆசைகளின் ஆசைகளின் பெருந்தலைவன்' எனலாம்.

(அமல், யாழ்ப்பாணம்)

**கே: தற்போதையை 'ரணில் அரசை'யும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பற்றியும் என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** அமல், என்னத்தை நினைக்க இருக்கின்றது! அண்மையில் முகநூலில் படித்த ஒரு சிந்தனை நினைவுக்கு வருகின்றது. ஒரு நரி தன்னை அக்காட்டிற்குத் தலைவனாகத் தேர்ந்தெடுத்தால் அனைவருக்கும் கம்பளிப் போர்வையைப் பரிசாகத் தருவதாகக் கூறியது! கம்பளிக்கு ரோமம் எங்கிருந்து வரப்போகின்றது என்று உணராத செம்மறி ஆடுகள் தலையைக் கீழே போட்டபடி நரியின் உருவத்தைக்கூடப் பார்க்காமல் தலையசைத்துத் தங்கள் தலைவனாக அந்நரியை ஏகமனதாக ஏற்றுக்கொண்டனவாம்! உங்கள் கேள்வியைப் படித்தபோது மேற்சொன்ன நரியின் ஞாபகம்தான் வந்தது!

(நேசன், யாழ்ப்பாணம்)

**கே: மனிதன் குரங்கிலிருந்து வந்தவன் என்ற கூர்ப்புக் கொள்கையை ஆதரிக்கும் சிலரின் கோட்பாட்டைத் தாங்கள் அறிவீர்கள்தானே! மேலும், "மனம் ஒரு குரங்கு மனிதன் ஒரு குரங்கு" என்ற ஓர் இடைக்காலப் பாடலை அறிந்திருப்பீர்கள். இன்னும், "குரங்குகள் போலே மரங்களின் மேலே தாவித்திரிந்தோமே" என இன்னுமொரு பாடலின் ஒரு வரியாக மேற்குறிப்பிட்ட வரி வருகின்றது. இப்படி மனிதனுக்கும் குரங்குக்கும் இடையிலான தொடர்பு இலக்கியங்களில் மட்டுமல்ல, பௌதீகவியல், வரலாறு, சமயம் என விரிந்து செல்கின்றது. குரங்குக்கும் மனிதர்களாகிய நமக்கும் இடையில் ஏதும் தொடர்பு இருக்கின்றதா?**

**ப:** நேசன், இதுபற்றி என்னுள்ளும் நிறைய தேடல்களும் கருத்தொருமைப்பாடுகளும் உண்டு! நிற்க, கொஞ்சக் காலத்திற்கு முன், மூன்று குரங்குகளை ஒரு படத்தில் காட்டி, அவற்றில் ஒன்று கண்ணைப் பொத்திக்கொண்டும், மற்றையது காதைப் பொத்திக்கொண்டும், மூன்றாவது வாயைப் பொத்திக்கொண்டும் இருக்கும். அதற்கான விளக்கம் முறையே, தீயதைப் பார்க்காதே, தீயதைக் கேட்காதே, தீயதைப் பேசாதே என்பதாகும். ஆனால், இப்போது மூன்று குரங்குகளுடன் அதிசயமான குரங்கு ஒன்று நான்காவதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றது! அப்படி நான்காவது குரங்கில் என்ன அதிசயம் என்று பார்த்தால், அது, தீயதைப் பாராது, தீயதைக் கேட்காது, தீயதைப் பேசாது இருப்பதற்குப் பதிலாக யாரையும் பார்க்காது, யார் பேச்சையும் கேட்காது, யாரிடமும் பேசாது தனியாக ஓரிடத்தில் நின்றுகொண்டு அல்லது உட்காந்திருந்துகொண்டு அலைபேசியை நோண்டிக்கொண்டே இருக்குமாம்! 'ரூ இன் வண்'(two in one), 'திறி இன் வண்' (three in one) ஆகியவற்றைக் கடந்து 'போ(க) இன் வண்' (four in one) இல் சுருங்கிப் போனான் குரங்கு - மனிதன்!

# இளையோர் காவியம்



நீ விட்ட இடைவெளி
இடைவெளி நிரப்புகிற இடைவெளி

உன் சோர்வுகள்
சாய்வுகளைக் கவனிக்கிற விழிப்பு

நீ சுமை என்ற பாரம்
வெற்றி கிடைக்கப்போகிற வாரம்

உனக்குத் தாடைகூட
தற்பாதுகாப்பு வேலி

உன் ஏக்கங்களின் அறிவிப்பு
நீ போய்க்கொண்டே இரு

நீ விழுந்த இடம்
தூக்கிவிடப் போகிற கைகள்

உன் சிதைவுகள்
நீ பத்திரமாய் மீட்கப்பட்ட வழி

உன் ஏமாற்றங்கள்
அனுபவங்களுடைய பலம்

உன்னைப் பாராட்ட விடப்படுவது கூட
உனக்குப் போடப்படுகிற தடை

நீ படுகிற அவஸ்தைகள்
உன்னைச் செதுக்கிற சிற்பி

உன் கண்ணீர் கூட
உனக்குக் காவியம் எழுதுகிற பேனா

நீ காலம் கடந்துவிட்டதை
ஒரு நேரம் கிடைத்து விட்டதை நினை
ஏனென்றால்
காலங்களும் நேரங்களும்
அவருடையது

(தொடரும்...)

உயிரோவியன்

## 45ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
25.07.1932



விண்ணில்
09.08.2022

**அமரர் கென்றிக் பிரகாசம் (ஐயா)**

கனவில் கூட நினைக்கவில்லை அப்பா
காலம் உங்களைப் பிரிக்கும் என்று
ஆலம் விழுதுபோல்
ஆயிரம் உறவு கொண்டு
கரம் பிடித்த காலம் முதல்
முத்தாக எட்டுப் பிள்ளைகளை
சொத்தாகக் கண்டீர்
உங்களை கனவில் தினமும் காண்கிறோம்
நடந்தது அனைத்தும் கனவாகிப்
போகாதா என்று ஏங்குகின்றோம்.

**தகவல் :** மகள்
எமிலி ஸ்ரீபன்
இத்தாலி - 00333510957528

AD-65

**உங்கள் பிரிவில் வாடும்**
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகளன்**

## விண்ணக வாழ்வில் 1ம் ஆண்டு நினைவு

மண்ணில்
18.11.1947



விண்ணில்
05.10.2021

**அமரர் இராயப்பு சூசைப்பிள்ளை செல்வராஜன்**

(ஓய்வுநிலை நூலகர், யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" [உரோ. 6:8]

எமது விசுவாச வாழ்வின் அடித்தளமாகவும், குடும்பத்தின் ஆணிவேராகவும்
அன்பான தந்தையாகவும் எம்மோடு இணைந்து வாழ்ந்து,
எம்மை வழிநடத்தியமையை நன்றியோடு நினைவு கூருகின்றோம்.
ஆண்டவன் அடியில் அமைதியுடன் இறைப்பாறுங்கள்

136, 3ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

AD-64

**பிரிவின் துயரில்**
**குடும்பத்தினர்**

# நஞ்சற்ற உணவு பாதுகாப்புச் செயற்திட்டம்



கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் நஞ்சற்ற உணவு பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் நல்லூர், சண்டிலிப்பாய், கோப்பாய், தெல்லிப்பளை மற்றும் ஊர்காவற்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்த கிராம மட்டத் தலைவர்களுக்கும் பயனாளிகளுக்குமான கருத்தமர்வு, நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் 20.09.2022 அன்று யாழ். பொதுசன நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

"பிரச்சாரப்படுத்தலும் குரல்கொடுத்தலும்" என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட கருத்த மர்விற்கு வளவாளராக திரு.உமாநாத், (தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர், மாவட்ட மொழி மற்றும் நல்லிணக்கக் கற்கைகளின் இணைப்பாளர்) அவர்களும் "நிதி முகாமைத்துவம், வியாபாரப் பொறிமுறைகள் மற்றும் பிரதேசமட்ட ஒன்றியத் தலைவர்களை உருவாக்கல்" தொடர்பான கருத்தமர்விற்கு நெறியாளராக திரு.நீலாம்பரன் (மாவட்ட இணைப்பாளர், திறன் விருத்திப் பிரிவு) அவர்களும் கலந்து கொண்டதுடன் 45 வீட்டுத்தோட்டப் பயனாளிகளும் நிறுவன செயற்திட்ட உத்தியோகத் தர்களும் கலந்துகொண்டனர்.

# மறையாசிரியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு



நாட்டின் தற்கால பொருளாதார நெருக்கடி மத்தியிலும் யாழ் மறைமாவட்டத்தின் பங்குகளில் அர்ப்பணிப்போடு பணியாற்றும் மறையாசிரியர்களின் பணியை ஊக்குவிக் கும் முகமாக அவர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு அண்மையில் வழங்கி வைக் கப்பட்டது. யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளின் வழிகாட்டலில் மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக் குநர் அருட்திரு ஜேம்ஸ் அவர் களின் ஒழுங்குபடுத்தலில் ஒவ் வொரு பங்குகளிலிருந்தும் நான்கு மறையாசிரியர் வீதம் தெரிவு செய்யப்பட்டு 297 மறையாசிரியர்களுக்கு இக் கொடுப்பனவுகள் வழங்கி வைக்கப்பட்டன.

# நவாந்துறையில் இளையோர் வாரம்

இளையோர் வாரத்தை முன்னிட்டு நாவாந்துறை பங்கு இளையோர்களால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வுகள் கடந்த வாரம் நடைபெற்றன.



பங்குத்தந்தை அருட்திரு ம.யேசுரட்ணம் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் இளையோர்கள் இணைந்து யாழ்.பண்ணை வைத்தியசாலையில் அமைந்துள்ள குழந்தை இயேசு ஆலய வளாகத்தை சிரமதானப் பணி மூலம் துப்பரவு செய்ததுடன், பங்கில் நடைபெற்ற தலைமைத்துவப்பயிற்சி, மின்னொளியில் கரப்பந்தாட்டம், கிளித்தட்டு, தீப்பாசறை போன்ற விளையாட்டு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

# தேசிய மட்ட ரெனிஸ் போட்டிக்கு பத்திரிசியார் கல்லூரி தகுதி



பாடசாலைகள் ரீதியாக நடைபெற்றுவரும் தேசியமட்ட ரெனிஸ் போட்டிக்கு யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் 17 மற்றும் 20 வயதுப் பிரிவுகளின் இருஅணியினரும் தகுதி பெற்றுள்ளனர். அண்மையில் நடைபெற்ற இப்போட்டிகளில் 20 வயதுப் பிரிவில் ரெனிஸ் ஒற்றயர் ஆட்டத்தில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து யாழ் புனித பரியோவான் கல்லூரி போட்டியிட்டு யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி அணி முதலாம் இடத்தையும் 17 வயதுப் பிரிவில் ரெனிஸ் ஒற்றையர் ஆட்டத்தில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து யாழ் புனித பரியோவான் கல்லூரி அணி போட்டியிட்ட நிலையில் யாழ் புனித பத்திரிசியார் அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

# போதனா வைத்தியசாலை சிற்றாலத் திருவிழா



யாழ். போதனா வைத்தியசாலை புனித ஆரோக்கிய அன்னையின் வருடாந்தத் திருவிழாவும் புனரமைக்கப்பட்ட சிற்றாலயத் திறப்பு விழாவும் கடந்த மாதம் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திருவிழாத் திருப்பலியினை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் ஒப்புக்கொடுத்து சிற்றாலயத்தினையும் ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களின் இதயபூர்வமான பங்க ளிப்புடன் புனரமைக்கப்பட்ட இச்சிற்றாலயத்தின் அனைத்து நிகழ்வுகளையும் வைத்தியசாலை ஆன்ம குரு அருட்பணி சி. அருள் சுதர்சன் அ.ம.தி ஒழுங்கு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# புனித ஹென்றியரசர் கல்லூரிக்கு பசுமைப் புரவர் விருது



இயற்கையோடு இணைந்த கல்வியை மாண வர்களுக்கு வழங்கி, இயற்கை ஆர்வலர்களாக மாணவர்களை உருவாக்கும் நோக்கோடு GREEN LAYER அமைப்பினால் வழங்கப்பட்ட 2022ஆம் ஆண்டிற்கான "பசுமைப் புரவலர்" விருதினை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பெற்றுக் கொண்டது.

கல்லூரியின் சுற்றுப்புறச் சூழலைப் பசுமையாக்கி, மரங்களை நடுகைசெய்து, இயற்கையோடு இணைந்த கல்வியை மாணவர்களுக்கு வழங்கி, மாணவர்களும் இயற்கையை நேசிக்க வேண்டும் என்கின்ற அவசியத்தை அவர்களுக்கு வலியுறுத்தும் செயற்பாட்டில் இக்கல்லூரியின் பங்களிப்பைப் பாராட்டி இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

# மன்னார் மறைமாவட்டக் குரு இராயப்பு அடிகள் காலமானார்



மன்னார் மறைமாவட் டத்தைச் சேர்ந்த அருட்திரு இராயப்பு அடிகள் கடந்த 24 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

கண்டி அம்பிட்டிய தேசிய குருமட மெய்யியல் துறை யின் ஆன்மீகக் குருவாக வும் விரிவுரையாளராகவும் பணியாற்றி வந்த இவர் திடீர் சுகவீனமுற்று கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இறை வனடி சேர்ந்துள்ளார்.

இவர் மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் பணியாற்றியுள்ளதுடன் கல்விப்பணியிலும் தன்னை ஈடுப டுத்திக் கொண்டவராவார். இவர் மன்னார் மடுமாதா சிறிய குருமட அதிபராகவும், மன்னார் சேவியர் ஆண்கள் கல்லூ ரியின் ஆசிரியராகவும் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். அருட்தந்தையின் பணிவாழ்வுக்காக இறைவனுக்கு நன்றி கூறி அவருடைய ஆன்மா இறைவனில் இளைப்பாற மன்றாடுவோம்

# யாழ். மறைக்கோட்ட பொது நிலையினர் ஒன்றுகூடல்



யாழ் மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகக்கூட்டம் கடந்த 18ஆம் திகதி பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் இடம்பெற்றது.

மறைக்கோட்ட இயக்குநர் அருட்திரு றெக்னோ அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மறை மாவட்ட இயக்குநர் அருட்திரு மவுலீஸ் அடிகள் கலந்து சிறப்பித்ததுடன் சிறப்புரையை அருட்திரு ஸ்ரனி அன்ரனி அடிகள் பொதுநிலையினரின் சீடத்துவப் பணிகளும் அதன் சவால்களும் என்ற தலைப்பில் வழங்கியிருந்தார். யாழ் மறைக்கோட்டப் பங்குகளில் இருந்து 25க்கும் அதிக மானவர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டுத்திட்டம்



கரித்தாஸ் கியூடெக் ஒருங்கிணைந்த சமூக மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளருக்கான ஆலோசனைகளும், சுயமுயற்சி விற்பனையும் கண்காட்சியும் கொழும்புத்துறை மாதர்சங்க முன்றலில் கடந்த 15.09.2022 அன்று இயக்குநர் ச.இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆனைக்கோட்டை, புதிய சோனகத் தெரு, கொழும்புத்துறை, மணியந் தோட்டம், உதயபுரத்தைச் சேர்ந்த கியூடெக் கரித்தாஸ் சுய முயற்சிக் குழுக்களும் இளையோரும், அரச அரச சார்பற்ற முயற்சியாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.